Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 08 புதன்கிழமை (22.06.2011) பக்கங்கள் 16 ஓசை – 266

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/720)




கூரறிவைத் தூண்ட கல்வி வேண்டும்

02



36 வருட சாதனை முறியடிப்பு

06



சிறு அரசை மிரட்டும் வல்லரசுகள்

08



30 கிலோ தங்கத்தில அலங்கரிப்பு

12

# சர்வதேசத்துடன் மோத அஞ்சப் போவதில்லை

## ஊடக மாநாட்டில் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

முப்பது ஆண்டுகால யுத்தத்தில் வெற்றி கண்ட எமது நாட்டின் மீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வருகின்ற போதிலும், சர்வதேசத்துடனான இராஜதந்திர மோதலுக்கு நாம் அஞ்சப் போவதில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு எதிராக மேறகொள்ளப்படும் சதித் திட்டங்கள் தோல்வியிலேயே முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக அரங்கில் இலங்கை தனிமைப்படுத்தப்படவில்லை எனவும், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவளித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விவகாரங்களில் வெளிநாடுகள் தலையீடு செய்ய வேண்டிய அவசியமில்லை என்றே சீன மற்றும் ரஷ்ய நாட்டுத் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பயங்கரவாத இல்லாதொழிப்பு மூலம் நாடு அடையக்கூடிய

(15ஆம் பக்கம் பார்க்க)

## வன்செயலைத் தடுக்க பொலிஸ் பிரிவு உதயம்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தேர்தல்கள் திணைக்களத்துடன் இணைந்த பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முதல் செயற்பட்டு வரும் வகையில் இந்தப் பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவானது சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் இயங்குவதாக அவர் மேலும்

(15ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வெடி பொருட்கள் தென்பகுதிக்கு கடத்த முயற்சி

### வவுனியாவில் 10 பேர் கைது

வன்னியில் இருந்து புலிகளால் கைவிடப்பட்ட வெடி பொருட்களை தென்பகுதிக்குக் கடத்திச் செல்ல முற்பட்ட கும்பல் ஒன்று வவுனியாவில் பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டுள்ளது. இரும்புக் குழாய்களில் அடைக்கப்பட்ட நிலையில் மிகத் தந்திரமாக பழைய இரும்புப் பொருட்களுடன் லொறிகளில் ஏற்றப்பட்டு தென்பகுதிக்கு இந்த வெடி பொருட்கள் கடத்தப்பட்ட சமயம் வவுனியா சோதனைச் சாவடியில் இவை பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டது.

இக்கடத்தலுடன் சம்பந்தப்பட்ட பத்துப் பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். ஐந்து லொறிகளும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

## வவுனியாவுக்கு வருகிறது கடவுச்சீட்டு அலுவலகம்

(வவுனியா)

வடபகுதி மக்களின் வசதி கருதி வவுனியாவில் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிராந்திய காரியாலயமொன்றைக விரைவில் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட பணிப்புரையின் கீழ் இத்திணைக்களத்தின் பிராந்திய காரியாலயம் திறக்கப் படவுள்ளது.

வடபகுதி மக்கள் இங்கு சகல தேவையான ஆவணங்களின் பிரதிகளுடன் கடவுச்சீட்டுக்கான விண்ணப்பத்தை 2500 ரூபா கட்டணத்துடன் செலுத்தி விட்டால், அதனை 6 வேலை நாட்களுக்குள் பரிசீலனை செய்து திணைக்களத்தின் அதிகாரிகள் புது கடவுச்சீட்டுக்களை சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு வழங்குவர் என்று குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா கூறினார்.

வடபகுதியில் உள்ள மக்கள் கடவுச்சீட்டுக்களை பெறுவதற்காக கொழும்பிற்கு வந்து பலநாட்கள் தங்கியிருந்து பணத்தையும், நேரத்தையும் வீணாக்குவதை தவிர்ப்பதற்காகவே இந்நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது.

## மீண்டும் வருகிறது நல்லிணக்க ஆணைக்குழு

### யுத்த சாட்சியங்களைப் பதிவு செய்யலாம்

(வவுனியா)

நல்லிணக்க ஆணைக்குழுவினர் மீண்டும் வடக்கில் தமது அமர்வுகளை நடாத்த உள்ளனர்.

கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஜனாதிபதி ஆணைக்குழு எதிர்வரும் வியாழக்கிழமை கிளிநொச்சியிலும், வெள்ளிக்கிழமை முல்லைத்தீவிலும், சனிக்கிழமை வவுனியாவிலும் தமது அமர்வுகளை நடத்தி பொது மக்களின் சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளதாக வவுனியா செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்

இதற்கு முன்னரும் ஒரு தடவை இந்த ஆணைக்குழு இங்கு கூடி மக்களின் சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தது

பொதுமக்கள் இந்த ஆணைக் குழுவின் முன்னால் தோன்றிச் சாட்சியங்களை அளிக்கலாம். இது ஓய்வுபெற்ற நீதியரசரை தலைவராகக் கொண்ட ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட சுதந்திரமான ஆணைக்குழுவென்பது குறிப்பிடதக்கது

## அச்சுவேலியில் பொலிஸ் பதிவு நடவடிக்கைகள் நிறுத்தம்

### அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

(அச்சுவேலி)

அச்சுவேலியில் குடும்பப் பதிவுகளை மேற்கொள்ள பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளது. நேற்றுக் காலைமுதல் மேற்படி பொலிஸ் பிரிவிற்குட்படட பொது மக்களை குடும்பப்பதிவுக்குட்படுத்த பொலிஸார் துரித நடவடிக்கை எடுத்தனர். இதற்காக ஒலிபெருக்கி மூலமாக பொது மக்களுக்கு அறிவித்தலும் விடுக்கப்பட்டது.


இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் பொதுமக்கள் மத்தியில் பதட்டம் குடிகொண்டது. இது தொடர்பாக அப்பகுதி மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும், சந்திரகுமார் எம்.பி.யிடமும் முறைப்பாடு செய்தனர்.

இவ்விடயம் தொர்பாக விரைந்து செயற்பட்ட அமைச்சர் யாழ்.பிரதிப்பொலிஸ்மா அதிபருடன் தொடர்புகொண்டதையடுத்து மேற்படி நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்பட்டன.

பதிவுகள் நிறுத்தப்பட்டது தொடர்பாக பொலிஸார் இன்று பொதுமக்களுக்கான அறிவித்தலை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## புலிகளின் படை பலத்துக்கு நானே மூளையாக இருந்தேன்

### பத்திரிகைப் பேட்டியில் கருணா அம்மான்



(கொழும்பு)

புலிகளின் மரபுவழி படையணிகளுக்கு நானே இராணுவ மூளையாகச் செயற்பட்டேன். புலிகளின் இராணுவ வெற்றிகளுக்கு அவர்களின் படை பலத்துக்கும் நான் தான் பின்னணியில் இருந்து செயற்பட்டேன் என்று பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து தான் வெளியேறியமைக்கு ஐ.தே.க. எந்த வகையிலும்


(15ஆம் பக்கம் பார்க்க)

**மாணவச் செல்வங்களே**

☞ உள்ளே கல்வி முரசு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி II இன் வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

# கூரறிவை வளர்க்கும் வகையில் முன்பள்ளிக் கல்வி அவசியம்

## வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ரங்கன்





(வடமராட்சி)

கடந்த கால நிகழ்வுகளைத் தெரிந்து நிகழ்காலத்தை நினைத்துப் பார்த்து எதிர்காலத்தை எண்ணிப்பார்க்கும் கூரறிவைக் குழந்தைகளுக்குத் தூண்ட முன்பள்ளிக் கல்வி வழிவகுக்க வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தலைவருமான ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த 18 ஆம் திகதி தொண்டமானாறு கெருடாவில் விவேகானந்தா முன்பள்ளியின் விளையாட்டு விழா நிலையத் தலைவர் மு.இரத்தினம் தலைமையில் இடம்பெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிகையில் அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் இப்பிரதேசசபை கடந்த சமயம் எமது நிர்வாகத்தின் அதிகாரத்தில் இருந்த வேளை விவேகானந்தா சனசமூக நிலையம் தனக்கென ஒரு தனியான கட்டடத்தை அமைத்துக்கொண்டது. அதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிதி ஒதுக்கித்தந்தார். நாம் எமது பிரதேச அபிவிருத்தியில் கூடிய கவனத்துடன் செயற்பட்டோம். நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இப்பிரதேசத்திலிருந்து பால.பத்மநாதக் குருக்கள் அவர்களை இவ்வட்டார வேட்பாளராக நிறுத்தியுள்ளோம். அவரை வெற்றிபெற வைத்து கெருடாவில் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய பொறுப்பை உங்களிடம் தந்துள்ளோம்.

இப்பகுதியில் உள்ளவர்கள் பெரும்பாலானோர் விவசாயம் மற்றும் கூலித் தொழிலாளிகளாகவே உள்ளனர். யுத்த நிலையிலிருந்து விடுபட்ட மக்கள் அயராது உழைக்க வேண்டியிருப்பதால் பெரும்பாலான பெற்றோருக்குத் தங்கள் குழந்தைகளிடம் அன்பாகப் பேசக்கூட முடிவதில்லை. பல இடங்களில் தந்தை தாயின் அன்பையும் அரவணைப்பையும்கூட குழந்தைகள் தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஊட்டச்சத்து விளம்பரங்களில் வரும் பெற்றோரிடமே தேட வேண்டிய நிலை உள்ளது. தொலைக்காட்சிப் பெட்டிகள் எதிர்காலத் தூண்களான குழந்தைகளின் பொன்னான பொழுதுகளையும் சத்தமில்லாமல் கபளீகரம் செய்துகொண்டிருக்கின்றன என்பது மிகுந்த கவலைதரும் தகவலாக அமைந்துள்ளது. எனவே கடந்த கால நிகழ்வுகளைத் தெரிந்து நிகழ்காலத்தை நினைத்துப் பார்த்து, எதிர்காலத்தை எண்ணிப் பார்க்கும் கூரறிவைக் குழந்தைகளுக்குத் தூண்ட முன்பள்ளிக் கல்வி வழிவகுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி முன்பள்ளி உதவித்திட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் கௌரவ விருந்தினர்களாக புத்தூர் பஞ்சசீக மகா வித்தியாலய அதிபர் கு.இரவீந்திரன் கெருடாவில் தெற்கு கிராமசேவையாளர் வே.வன்னிமரம் அச்சுவேலி தெற்கு கிராமசேவையாளர் பு.சாந்தரூபன் தொண்டமானாறு வீரகத்தி வித்தியாலய அதிபர் இ.ஸ்ரீநடராசா பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் வே.பரமானந்தம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கூட்டுப் பசளை தயாரிப்பு; கோண்டாவிலில் புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பொதுச் சுகாதார அலுவலர் பிரிவில் "கூட்டுப் பசளை தயாரிப்புத் தொட்டிகள்" வழங்கப்பட்டு வருவதாகவும் இவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் தொடர்புகொள்ளுமாறும் கோண்டாவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிறேம்குமார் அறிவித்துள்ளார்.

வறுமைநிலையில் உள்ளவர்கள், தமது காணிகளில் கூட்டுப்பசளை தயாரிக்க இடவசதியற்றவர்கள் மற்றும் கூட்டுப்பசளைகளைத் தயாரித்து பயன்பெற ஆர்வமுள்ளவர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்படுகின்றன. இதுவரை 150 தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்ட அளவான தொட்டிகளே கையிருப்பில் உள்ளன.

எனவே இதனை பெறவிரும்புவோர் கோண்டாவில் நவரட்ணராஜா வீதியில் உள்ள பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (கா)



யாழ்.எய்ட் நிறுவனத்தின் அனுசரணையில் உடுவில் மான்ஸ் பாடசாலை மாணவிக்குக் கற்றல் உபகரணங்களைப் பிரதம அதிதி மு.கஜன்தன் வழங்குவதைக் காணலாம்.

# கவின்கலைக் கண்காட்சி

(யாழ். நிருபர்)

யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி மாணவர்கள் நடத்திய கவின்கலைக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சற்குணராஜா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு கல்விக் கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார்.

கல்லூரி அதிபர் இ. குணநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கண்காட்சியில் பெருந்தொகையான மாணவர்கள் கலந்துகொண்டு பார்வையிட்டனர். (10)

# யாழ்.நகரில் நாடகவிழா

(யாழ். நிருபர்)

கலை கலாசார அமைச்சும், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்டச் செயலகமும் இணைந்து நடாத்தும் நாடகவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நாடக விழாவில் யாழ். திருமறைக் கலாமன்றத்தின் "அற்றைத்திங்கள்" நாடகமும் யாழ். பல்கலைக்கழக நாடமும் அரங்கியலும் மாணவர்களின் "பூதத்தம்பி" இசை நாடமும் மற்றும் கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் கலை கலாசார அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

# கொக்குவிலில் கசிப்பு தண்டம் விதித்தது நீதிமன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் சட்டவிரோத கசிப்பு வைத்திருந்த நபர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் 25000 ரூபா குற்றப்பணம் அல்லது நான்கு மாத சாதாரண சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

மேற்படி நபர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

இவருக்கு எதிரான வழக்கை விசாரணை செய்த ஏ.ஏ.ஆனந்தராஜா குற்றவாளிக்கு 25000 ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்ததுடன் தவறின் நான்கு மாதம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கினார்.

அத்துடன் குறித்த நபரிற்கு எதிராக பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்ட மற்றுமொரு வழக்கைப் பதிவுசெய்த குறித்த நீதிபதி அனுமதிப்பத்திரமின்றி கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்கள் வைத்திருந்த குற்றத்திற்காக 20000 ரூபா தண்டமும் தவறின் மூன்றுமாதகால சாதாரண தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார். (பா)

# திருக்குறளும் முகாமைத்துவமும் நூல் வெளியீட்டு விழா

(யாழ்.நிருபர்)

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கியல்துறைத் தலைவருமான பேராசிரியர் தி.வேல்நம்பி எழுதிய திருக்குறளும் முகாமைத்துவமும் என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்குப் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் அதிபர் இ.இராஜமகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் ஆசியுரைகளை புத்தூர் சிவன் தேவஸ்தான பிரதமகுரு சாமிவிஸ்வநாதக் குருக்ககள், கல்லூரியின் முன்னாள் அதிபர் வ.ஆறுமுகம் ஆகியோரும் வழங்குவர்.

வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி க.தேவராஜாவும், மதிப்பீட்டுரைகளை கலாநிதி மனோன்மணி சண்முதாஸ் மெய்யியல்துறைத் தலைவர் பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தி ஆகியோரும் வழங்கவுள்ளனர். (10)



வதிரி சி.ரவீந்திரனின் "மீண்டு வந்த நாட்கள்" கவிதைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. நூலாசிரியருக்கு மாணவன் ஒருவர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம். (18)

# தரமற்ற குளிர்பான உற்பத்தி சூத்திரதாரிக்குப் பிடியாணை

(யாழ்ப்பாணம்)

சுகாதாரமற்ற முறையில் "நெல்லிக்கிரஸ்" குளிர்பாணம் தயாரிப்பில் ஈடுபட்டவருக்கு எதிராக பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் யாழ்.நீதிமன்றில் தொடரப்பட்ட வழங்கில் குறித்த நபர் மன்றில் ஆஜராகாததை அடுத்து நீதிமன்றம் அவருக்கெதிராகப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு தொடக்கம் நபர் ஒருவர் "நெல்லிக்கிரஸ்" குளிர்பாணம் தயாரித்து விற்பனை செய்து வந்துள்ளார். அவரது தயாரிப்பு சுகாதாரமற்றது என பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்திக்கு தடைசெய்யப்பட்டிருந்தது.

இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சில மாதங்களின் பின்னர் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை அவரது சகோதரர் பெற்றுச் சென்று கோப்பாய் பகுதியில் வைத்து மீண்டும் தயாரிப்பில் ஈடுபட்டுவந்துள்ளார்.

இது குறித்த தகவல்களை அறிந்துகொண்ட பொதுச் சுகாதார பரிசோதகர் அங்கு சென்று சோதனை நடத்தியவேளை உற்பத்தியில் ஈடுபட்ட நபர் தப்பிச் சென்றுள்ளார். ஆயினும் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன யாழ்.நீதிமன்றில் வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையிலும் குறிப்பிட்ட சந்தேக நபர் மன்றில் ஆஜராகாததை அடுத்து நீதிமன்றால் சந்தேக நபருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு. பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (கா)

**நாம் செய்யும் பணியில் வித்தியாசம் பாராட்டவேண்டியதில்லை. எந்தப்பணியையும் கடமை உணர்ச்சியுடன் செய்ய வேண்டியதுதான் முக்கியம். அதுவே இறைவனுக்கு உகந்ததாகும்.**

- அறிஞன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## மீண்டும் தொடங்கும் நாடகம்

மக்களை வெறுப்பும், விரோதமும் வற்றிவிடாத கொதி நிலையில் வைத்திருப்பது எப்படி என்ற வித்தையில் துறைபோகியிருப்பதை மீண்டும் நிரூபித்து வெற்றி கண்டுள்ளன யாழ்ப்பாண ஊடகங்கள். குழப்படி செய்துவிட்டு அடிவாங்காமலிருக்க, முன்னமேயே கத்திக்குழறி ஆர்ப்பாட்டம் பண்ணுகின்ற தந்திரம் நமக்குத் தான் சின்ன வயதிலிருந்தே தெரியுமே!

அளவெட்டிச் சம்பவத்திலும் நடந்திருப்பது அதுதான் என்பது வழக்கம் போல் மெல்ல மெல்ல வெளித்து வருகிறது. ஆனால், அதற்கிடையில், ஒரு பெரிய அடக்குமுறையும் பயங்கரவாதமும் இங்கே நடந்துவிட்டதாக உலகெங்கும் அதிரப் பண்ணிவிட்டன நம் பத்திரிகைகள். தமிழர்களா கொக்கா?

அளவெட்டிக் கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிமார் நையப்புடைக்கப்பட்டதாகவும், நூலிழையில் உயிர்தப்பி வந்த திகில் கதையை விவரித்தும், எம்.பிமாரின் பஜரோ ஏசி வாகனங்க ளெல்லாம் அடித்து நொருக்கப்பட்டுவிட்டதால் கால் நடையாகவே நொண்டி நொண்டி வீடு செல்ல வேண்டி நேர்ந்த அவலத்தைக் கதறியும் இன்னும் பொச்சம் தீரவில்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வரை இழுத்துச் செல்ல இந்த சம்பவம் போதாதே என்ற கவலையில் வேறு அவர்கள் இன்னும் நொந்து போயிருக்கிறார்கள் என்றே தொடரும் அறிக்கைகளைப் பார்த்தால் தெரிகிறது.

சுதந்திரன் பத்திரிகை காலத்திலிருந்து இவர்களின் அறிக்கை நாடகங்களை நன்கு தெரிந்தவர்களே கொஞ்சம் ஆடித்தான் போனார்கள். இவர்கள் அனுமதி பெறாமலே கூட்டத்தை நடத்தியிருந்தாலும் இராணுவத்தினர் எப்படி அதைக் கேட்கப்போகலாம்? பொலிஸ்தானே கேட்க முடியும்? என்ன இருந்தாலும் எங்கள் மக்கள் தெரிவு செய்த எம்.பிமாருக்குப் போட்டு அடித்தது அராஜகம் தான் என்றே நாம் யோசிக்க வேண்டியிருந்தது.

ஆனால், ஞாயிற்றுக்கிழமை 'ஐலண்ட்'பத்திரிகையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ கொடுத்திருக்கும் விளக்கங்களும் ஆதாரங்களும் நமக்கு வேறு ஒரு உண்மையைச் சொல்லுகின்றன. கூட்டமைப்பினரின் நடிப்புத் திறமையும் கூச்சல் தந்திரமும் இன்று நேற்றுப் பழகி வந்ததல்ல என்பதும் நம் புத்தியில் உறைக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்ததாகவும், அதில், வடக்கு கிழக்கில் தமது கட்சி வேலைகளை முன்னெடுக்க இராணுவ உதவியை எதிர்பார்ப்பதாகவும், எதிர்காலத்தில் படைத் தரப்புடன் நெருக்கடியற்ற விதத்தில் இணைந்து பணியாற்ற விரும்புவதாகவும் கேட்டிருந்ததாக பாதுகாப்புச் செயலர் கூறியுள்ளார்.

சம்பந்தனும் நீங்களும் நேரில் சந்தித்துப் பேசினீர்களா என்ற ஐலண்ட் பத்திரிகையின் கேள்விக்குப் பதிலளித்த கோத்தாபய, இந்தியத் தூதர் அசோக் காந்தாவின் அழைப்பை ஏற்று அவரது இல்லத்தில் ஜூன் 8ஆம் திகதி சம்பந்தன் இந்தியா பயணமாகு முன் மூவரும் சந்தித்துப் பேசியதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

தங்களது கட்சியின் செயல் திட்டத்தை அறிவிப்பதற்கு, பாதுகாப்புத் தரப்புக்கும் தங்களுக்கும் ஏற்புடைய ஒரு நாளைத் தரும்படி சம்பந்தன் கேட்டிருந்தார். இது பற்றிய விளக்கத்தை தற்போது இந்தியாவிலிருக்கும் சம்பந்தன் அவர்களிடம் நீங்கள் கேட்டறிந்து கொள்ளலாம் என்றும் பாதுகாப்புச் செயலர் கூறியுள்ளார்.

அவரது அந்தக் கடிதத்தில் கேட்டிருந்த நாளை இரு தரப்பும் தீர்மானித்து ஏற்பாடுகளைச் செய்து கொள்வதற்கு முன்பாகவே கூட்டமைப்பினர் அளவெட்டிக் கூட்டத்தை நடத்தினர். அது பற்றி விசாரிக்கவே பாதுகாப்புத் தரப்பினர் அங்கு சென்றனர். அங்கு கூட்டமைப்பினரின் பாதுகாப்பிற்கு வழங்கப்பட்டிருந்த எம்.எஸ்.டி.யினருடனேயே வாக்குவாதம் ஏற்பட்டது. எம்.எஸ்.டி.யைச் சேர்ந்தவர்களே தாக்கப்பட்டுமிருக்கிறார்கள். எம்.பிக்களோ கூட்டத்தில் பங்குபற்ற வந்தவர்களோ தாக்கப்படவில்லை. வாகனங்கள் அடித்து நொருக்கப் பட்டதாகச் சொல்வதும் பொய். கூட்டமைப்பு எம்.பி.க்கள் அந்த லக்ஸரி வாகனங்களிலேயே சனிக்கிழமை யாழ். தளபதி ஹத்துருசிங்கவிடம் சென்று புகார் கொடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மக்கள் தொடர்பு அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில், ஊடகங்கள்தான் இச்சம்பவத்தைப் பெரிதுபடுத்தி விட்டதாக ரீ.என்.ஏ. கூறியுள்ளது. ஆனால், அமெரிக்கா உள்ளிட்ட நமது வெளிநாட்டுத் தூதரகங்கள் பலவற்றிடம் அளவெட்டிச் சம்பவம் குறித்து அந்த அரசாங்கங்கள் கேட்டுள்ளன. அந்தளவுக்கு ரீ.என்.ஏ.தான் இதைப் பெரிதுபடுத்தி எல்லா இடங்களுக்கும் அறிவித்துள்ளது.

அரசுடன் உறவை மேம்படுத்த சம்பந்தன் மேற்கொள்ளும் முயற்சிகளைக் குழப்ப ரீ.என்.ஏ.யின் ஒரு பிரிவினரின் சதியே இது என்று பாதுகாப்புச் செயலர் ஐலண்ட் பத்திரிகைக்குக் கூறியிருக்கிறார். அளவெட்டிச் சம்பவத்தைப் படைத்தரப்பின் அடாவடித் தனமாகக் காட்ட ரீ.என்.ஏ.யில் சிலர் முயற்சித்ததாலேயே வேறுவழியின்றி சம்பந்தனின் கடிதம் குறித்து தான் வெளியிட வேண்டி வந்துவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

கூட்டமைப்போ தமிழ் ஊடகங்களோ இந்த உண்மைகளுக்கு முகம் கொடுக்கப்போவதில்லை. பின்புற மண்ணைப் போல தட்டி விட்டு, தேர்தலுக்கிடையில் அடுத்த அராஜகத்தை உருவாக்குவது எப்படி என்று யோசிக்கப் போய்விடுவார்கள்.

- ஆசிரியர்

# தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

### - பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உணவு மற்றும் நீர் ஊடாகப் பரவும் நோய்களின் பரம்பல் அதிகரித் துள்ளது.

எனவே இதனை கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பணிமனையில் இடம்பெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் தலைமைவகித்து உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; உணவு, நீர் ஊடாக அதிகமான நோய்கள் ஏற்பட்டுள்ளது.

எமக்கு வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறான. சுகாதாரப் பிரச்சினை உருவாகி வருகின்றன. நாம் அவற்றினை அனைவரின் ஒத்துழைப்புடனும் வெற்றிகரமாக எதிர்கொண்டு வருகின்றோம்.

உணவகங்களின் தரத்தினை பேணுவதற்கு சுகாதாரத் திணைக்களம் பல செயற்திட்டங்களை செயற் படுத்தியது. ஆயினும் அது குறிப்பிட்ட அளவே பயனளித்துள்ளது. எனவே இதனை சீர் செய்யும் வகையில் உணவகங்களின் ஏ.பி.சி.டி. தராதரத்திற்கு ஏற்ப தரச்சான்று வழங்கப்பட உள்ளது.

எனவே அது தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள 11சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் தனித்தனியாக அப்பகுதி உணவு நிலைய உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கப்படஉள்ளது. ஏற்கனவே எட்டுப் பிரிவுகளிலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஏனைய 3 பிரிவுகளுக்கும் விரைவில் இதுதொடர்பாக விளக்கமளிக்கப்படும்



அதன் பின்பு அவர்கள் தங்கள் நிலையங்களை தயார் செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்படும் அந்த அவகாசத்தின் பரிசோதனைக்குட்படுத்தி தரச்சான்று வழங்கப்படும். அந்த தரச் சான்று நுகர்வோர் இலகுவில் காணக் கூடிய வகையில் குறித்த நிலையத்தில் காட்சிப் படுத்தப்படவேண்டும் தவறு வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதன் பின்னர் இந்தச் சான்றிதழ் குறித்து மாணவர்கள், அலுவலர்கள், பொதுமக்கள் என பலதரப்பினருக்கும் விளக்கமளிக்கப்படும். இந்த செயன்முறை பொலநறுவை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு வெற்றி அளித்துள்ளது. எனவே நாமும் அதுபோல் செயற்பட அனைவரும் உதவ வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் பிரதி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் கலாநிதி சிவரானி, சுகாதார கல்வி அலுவலர் எஸ். பிரணவன், மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் எஸ். சிவரூபன் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (கா)

## காரைநகர் மேற்கு வீதி காபற் வீதியாக புனரமைப்பு

(யாழ்.நிருபர்)

நீண்ட காலமாக பழுதடைந்து குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கும் காரைநகர் மேற்கு வீதிக்கு அதிர்ஷ்டம் அடித்துள்ளது.

இவ் வீதி காபற் வீதியாகப் புனரமைக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தித் திணைக்களப் பொறியியலாளர் எம்.சிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

காரைநகர் மேற்கு வீதி பொதுமக்கள் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு மிக மோசமாகச்சேதமடைந்திருப்பதாகவும், அதனை உடனடியாகப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து 7.5 கி.மீற்றர் நீளமான காரைநகர் மேற்கு வீதியை காப்பேற் வீதியாக புனரமைக்க நடவடிக்கை எடுப்பதாக வீதி அபிவிருத்தித் திணைக்கள பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (10)

## கரவெட்டியில் 25 குடும்பங்களுக்கு வணிகர் கழகம் வாழ்வாதார உதவி

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 25 குடும்பங்களுக்கு யாழ். வணிகர் கழகத்தினால் வாழ்வாதார மேம்பாட்டுக்காக கோழி வளர்ப்பிற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இந்நிகழ்வில் 25 பயனாளிகளுக்கு தலா 25,000 ரூபா பெறுமதியான கோழிக்கூடுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் நெல்லியடி வணிகர் சங்கத்தலைவர் சி.அகிலனும் கலந்துகொண்டு கோழிக்கூடுகளை வழங்கி வைத்தார்.

யாழ். வணிகர் கழகத்தால் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக ரீதியாக இனம்காணப் பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங் களுக்கு இத்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின் றன. அதன் ஒரு அங்கமாக கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது. (18)

# யாழில் புற்றுநோய் சிகிச்சை நிலையம்;

## தெற்கிலிருந்து புறப்படுகிறது பாதயாத்திரை

### நிதி திரட்டுவதற்கான ஏற்பாடுகள் துரிதம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நவீன புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நிதிசேகரிக்கும் முகமாக தெற்கில் இருந்து வடக்கு நோக்கி பாத யாத்திரை ஒன்று நடாத்தப்படவுள்ளது.

புற்றுநோய் சிகிச்சைக்ககான வசதிகளை மேம் படுத்தும் நோக்குடன் செயற்பட்டுவரும் The colours of courage trust எனும் நிதியமானது, இப் போது மிகவும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் புற்று நோய் சிகிச்சை நிலையம் ஒன்றினை நிறுவுவதே இந்தத்திட்டமாகும்.

இதற்கென தெற்கில் இருந்து வடக்கு நோக்கி நடைப்பயண பிரசாரம் ஒன்றினை இந்நிதியம் மேற் கொள்ளவுள்ளது. தேவேந்திர முனையிலிருந்து ஜூலை 1 ஆம் திகதி ஆரம்பிக்கும் இந்த நடைப் பயணமானது 28 நாட்களில் 6710 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து பருத்தித்துறையைச் சென்றடையும்.

இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக MAS Intimates நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நாதன் சிவகணநாதன் விளக்கமளிக்கையில், The colours of courage trust எனும் நிதியம் 2008 ஆம் ஆண்டு உதயமானது. கடந்த 2 வருடங்களாக இந் நிதியம் 65 மில்லியன் ரூபா நிதியினை திரட்டியுள்ளது.

அதன் தொடர்ச்சியாகவே Trail நிகழ்ச்சித் திட்டமும் உருவானது. யாழ். பொது வைத்தியசாலையில் (சிறுவர்களுக்கான) புற்றுநோய் சிகிச்சைப் பிரிவொன்றை நிறுவுவதும் தெல்லிப் பழை வைத்தியசாலையில் இயங்கும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை மேம்படுத்துவதும் இம்முயற்சி யின நோக்கங்களாகும்.

தேவேந்திர முனையில் இருந்து ஆரம்பிக்கும் நடைபயணமானது களுத்துறை, கொழும்பு, கொச்சிக்கடை, பன்னல, குருணாகல், அனுராதபுரம், ஓமந்தை யாழ்ப்பாணம் ஊடாக பருத்தித்துறையை சென்றடையும். இந்தப் பயணத்தின் போது பல் வேறு இடங்களில் தரித்துச் செல்வதற்கும், அதன்போது விஷேட நிகழ்வுகளை நடத்தவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

ரீ.எம்.டில்சான், மஹேல ஜயவர்தன, முத் தையா முரளிதரன், தமயந்தி தர்ஷா, மஞ்சு வன்னி யாராச்சி போன்ற விளையாட்டு வீரர்களும் இணைந்து நடக்க வுள்ளனர். இந்த நடைப் பயணத் தின் ஊடாக 220 மில்லியன் ரூபாவை திரட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

முழுத் தூரமும் நடப்பவர் 2 இலட்சம் ரூபாவையும் 3 தினங்களுக்கு நடப்பவர் 30 ஆயிரம் ரூபாவையும் ஒரு தினத்திற்கு மட்டும் நடப்பவர் 5 ஆயிரம் ரூபாவையும் திரட்டவேண்டும் என எதிர் பார்க்கின்றோம். அவர்கள் நடக்கும் வழி யிலோ அல்லது தமது உறவினர், நண்பர்களிட மிருந்தோ இத்தொகையைச் சேகரிக்கலாம். இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் www.trailsl.com என்ற இணையத் தளத்தின் ஊடாகவோ அல்லது 0713 827 025 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலமோ தங்களை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். அதேவேளை, இந்த நடைப்பயணம் செல்லும் வழியிலுள்ள மக்களும் நலன் விரும்பிகளும் ஒரு செங் கல்லினை 500 ரூபா கொடுத்து கொள்வனவு செய் வதன் மூலமும் இந்நிதியத்திற்கு பங்களிப்புச் செய் யலாம்.

இந்த நடைப்பயணத்தில் பங்கு பற்றாதவர்கள் இணையத்தளத்தின் ஊடாக நிதியை அன்பளிப் புச் செய்யமுடியும் என்ற அடிப்படையில் இது வரை சுமார் 30 மில்லியன் ரூபா நிதியுதவி மேற்படி நிதி யத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

# துணுக்காய் கல்வி வலயத்தில் பாடரீதியாக தரவட்ட செயற்பாடுகள்

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டு சுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் கல்விக் கோட்டங்களில் உள்ள பாடசாலைகளின் பாட ரீதியான அடைவு மட்டத்தினை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு கோட்ட ரீதியாக ஒவ்வொரு பாடங்களுக்கும் தர வட்டங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

இத் தரவட்டங்கள் ஒவ்வொரு பாட ஆசிரிய ஆலோசகர் தலைமையில் கூடி ஒவ்வொரு பாட சாலையும் பாட ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகளினை ஆராய்வதுடன், அவற்றினை எவ்வாறு தீர்க்கலாம் என்பதற்கான திட்டத்தினையும் வகுத்துக் கொள்கின்றன.

இத்தகைய செயற்பாடு ஒன்று ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட இந்து சமய ஆசிரியர்களிடையே கடந்த வார இறுதியில் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இச் செயற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆலய வழிபாடுகளில் மாணவர் பங்குபற்றுவது குறைந்துள்ள தன்மையை சுட்டிக்காட்டப்பட்டதுடன், மாணவர்களுக்கு ஆன்மீக கருத்துக்கள் வழங் கப்பட வேண்டிய அவசியமும் வலியுறுத்தப் பட்டது.

இதனைத் தீர்ப்பதற்காக பாடசாலை ரீதியாக இந்து மாணவர் மன்றங்களின் செயற்பாடுகளை அதிகரிப்பது எனவும், மாணவர்களினை அழைத்து பாத யாத்திரை அல்லது ஆலய தரிசனங்கள் மேற்கொள்வது எனவும், காலைக் கூட்டங்களில் நற்சிந்தனைகள் நிகழ்த்துவது எனவும், குருபூசை தினங்கள் மற்றும் சமய விழாக்களினை பாட சாலைகளில் கட்டாயமாக நடாத்துவது எனவும் குழும பாடசாலைகளாக சமயப் போட்டிப் பரீட் சைகள் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இச் செயற்பாடுகளினை துணுக்காய் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் மோகனகாந்தன் அவர் களும் வந்து அவதானித்ததுடன், தமது கருத்துக் களையும் தெரிவித்ததுடன், மேற்படி தீர்மானங் களை வலியுறுத்தியும் கூறினார். (42)

# வழங்கப்படாதிருந்த நிவாரணம் மீளவும் வழங்குவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

2011 ஜனவரி மாதத்திலிருந்து வழங்கப்படாதிருந்த இலவச உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்டச் செயலகம் மேற்கொண்டுள்ளது.

இவ்வாண்டு ஜனவரி முதல் மேமாதம்வரையான ஐந்து மாத நிவாரணம் வழங்கப்படாத நிலையில், முன்றுமாதங்களுக்கான ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கான இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

குடும்ப அங்கத்தவர் தொகை ரீதியாக நிவாரண விநியோக விபரம் வருமாறு:

| | அங். 01 | அங். 02 | அங். 03 | அங். 04 | அங். 05 |
|---|---|---|---|---|---|
| பொருள் | அளவு | அளவு | அளவு | அளவு | அளவு |
| சிவப்பு நாட்டரிசி | 7.050 | 16.200 | 23.775 | 25.350 | 33.975 |
| மாவு | 4.500 | 7.500 | 9.000 | 15.000 | 15.000 |
| சீனி | 3.000 | 4.500 | 6.000 | 6.000 | 9.000 |
| பருப்பு | 0.600 | 0.750 | 1.050 | 1.200 | 1.500 |

# தென்இலங்கைக்கு ஏற்றுமதி; வெங்காயச்செய்கையில் ஆர்வம்

(யாழ்.நிருபர்)

யாழ். குடாநாட்டில் வெங்காயச்செய்கையில் விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த சில மாதங்களாக சின்ன வெங் காயத்துக்கு யாழ்ப்பாணத்தில் நல்ல கிராக்கி இருந்த வந்தது. தென் னிலங்கைக்கு அதிகளவில் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுவதால் அதிகரித்த விலை கிடைத்தது. இதனால் இம் முறை விவசாயிகள் வெங்காயச்செய்கையில் பெருமளவில் ஈடுபட்டு வருகின்றனர்.

அளவெட்டி, கந்தரோடை, மல்லாகம் போன்ற பிரதேசங்களில் வெங்காயச்செய்கை கூடுதலாக இடம்பெற்று வருகிறது.

இந்த முறை சிறுபோக பயிர்ச்செய்கையின்போது வெங்காயச் செய்கையிலே கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. (10)

# வீதியைத் திருத்துவதற்கான முதற்கட்டப் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு தசாப்த காலமாக திருத்தப்படாது குன்றும் குழியுமாகக் காணப்பட்ட சுண்டிக்குளிப்பகுதியில் உள்ள கொழும்புத்துறை வீதியையும், ஈச்சமோட்டைவீதியையும் இணைக்கும் விதானையார் வீதியைத்திருத்துவதற்கு யாழ்மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ் வீதி மிகவும் பள்ளமாக இருந்தமையால் மழை காலங்களில் இவ் வீதியில் தண்ணீர்தேங்கி போக்குவரத்து செய்ய முடியாமல் இருந்தது. மேலும் குன்றும் குழியுமாகவே இவ் வீதி காணப்பட்டது.

இதனைத் திருத்துவதற்காக பெரிய பாறைக் கற்களும், சல்லிக் கற்களும் முதற்கட்டமாக இவ் வீதியில் போடப்பட்டு விதானையார் வீதியினை திருத்துவதற்கான முதற்கட்ட பணி ஆரம்பிக்கப்பட் டுள்ளது. (42)

# நீச்சல் பயிற்றுவிப்பாளர்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பல இலட்சம் ரூபா செலவில் நீச்சல் தடாகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. வெகு விரைவில் திறப்பு விழாவை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளைக் கல்லூரி நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

நீச்சல் தடாகத்திற்கு பயிற்றுவிப்பாளராகச் செயற்படக்கூடிய மற்றும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடக்கூடிய ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், செயலாளர், பழைய மாணவர் சங்கம் யாழ். மத்தியகல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாமென பழைய மாணவர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (10)

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் - களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநான் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும்இடம்பெறும். (10)

□ □

சாவகச்சேரி- சங்கத்தானை கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஜூலை மாதம் முதலாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (10)

## கும்பாபிஷேகம்

(யாழ்.நிருபர்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் இராஜ கோபுர மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலையில் நடைபெறுகிறது. காலை 6.00 மணிக்கு இராஜகோபுர கும்பா பிஷேகம் இடம்பெற்று 6.30 மணிக்கு மகாகும்பாபி ஷேகம் இடம்பெறும்

பிரதமகுரு பிரதிஷ்டா சிரோன் மணி ஸ்ரீவிஸ்ணு ஸ்ரீ க.ச.சோமாஸ கந்தாச்சாரியார் கிரியைகளை நிகழ்த்தி வைப்பார். (10)

# மீள்குடியேறியுள்ள பகுதிகளுக்கு மின் இணைப்புக்கு 513 மில். ஒதுக்கீடு

(கட்டுவன்)

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளுக்கான மின்சார விநியோகத்திற்கு 513 மில்லியன்ரூபாவை தெல்லிப்பழை பிரதேச செயலகம் ஒதுக்கியுள்ளது.

இந்நிதியின் மூலம் 171 கிலோமீற்றருக்கு இடைப்பட்ட பிரதேசங் களுக்கு வலுக்குறைந்த அழுத்த மின் விநியோகம் செய்யப்படவுள் ளது.

ஜே/221 இளவாலை வடக்கு, ஜே/222 இளவாலை வடமேற்கு, ஜே/223 வித்தகபுரம், ஜே/225 கொல்லன்கலட்டி, ஜே/226 நகுலேஸ்வரம், ஜே/228 தெல்லிப்பழை, ஜே/230 தந்தை செல்வாபுரம், ஜே/231 மாவிட்டபுரம், ஜே/232 மாவிட்டபுரம் தெற்கு, ஜே/236 பழையவீமன் காமம் வடக்கு, ஜே/237 பழைய வீமன்காமம் தெற்கு, ஜே/241 வறுத்தலைவிளான், ஜே/243குரும்பசிட்டி, ஜே/245 வசாவிளான் மேற்கு ஆகிய 14 கிராம அலுவலர் பகுதிகளுக்கே மின் சார விநியோகம் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது. (22)

# இயங்காத சனசமூக நிலையங்களை இயங்கவைப்பதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களில், இதுவரை 2011 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபையினைத் தெரிவு செய்யாத சனசமூக நிலையங்களை இயங்க வைப்பதற்கான புதிய நிர்வாக சபையினைத் தெரிவு செய்யும் நடவடிக்கையினை யாழ்ப்பாண மாநகர சபை மேற்கொண்டுள்ளது.

இந் நடவடிக்கையின் ஒரு கட்டமாக இதுவரை பொதுக்கூட்டத் தினை கூட்டாமல் இருக்கும் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டத்தினை எதிர்வரும் 26 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு நிலைய மண்டபத்தில் மாநகரசபையின் பொறுப்பான உத்தியோகத்தர்களால் நடாத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக ஈச்சமோட்டை சனசமூக நிலையத் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் சகல அங்கத்தவர்களுக்கும் அக் கூட்டத்தில் தங்கள் வசமுள்ள சகல நிலைய ஆவணங் களையும் சமர்ப்பித்து, பொதுக்கூட்டம் செவ்வனே நடைபெற ஒத்துழைக்குமாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ வேண்டுகோள் விடுத்துள்ளார். (42)





பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் யாழ். புல்லுக்குளம் நவீன மயப்படுத்தப்பட்டு அபிவிருத்திசெய்யப்படும் வேலைத்திட்டங்களை நேற்று வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆரம்பித்து வைப்பதனையும் புல்லுக்குளத்தின் தோற்றத்தையும் இப்படங்களில் காணலாம். (படம் பார்த்தீபன்)

# பயன்படுத்த முடியாத பாடநூல்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டாம்

## கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் புஸ்பகுமார

(யாழ். நிருபர்)

எல்லா மாணவர்களுக்கும் இலவச பாடநூல்கள் உரிய முறையில் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பக்கங்கள் விடுபட்டுள்ள அலலது பயன்படுத்த முடியாத பாடநூல்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டாமென சகல அதிபர்களையும் சுற்று நிருபத்தினூடாக அறிவுத்தியுள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக களஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.கே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு கல்வியாண்டில் மாணவர்களுக்கு விநியோகிக்கத் தேவையான பாடநூல்களின் கோரல் படிவங்கள் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக் கும் அனுப்பி வைக்கப்பட் டுள்ளதாகவும், பாடநூல் விநியோகப் பொறுப்பாசிரியர்கள் தங்கள் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்க ளின் எண்ணிக் கையைச் சரியாகக் குறிப்பிட்டு கோரல் படிவங்களை நிரப்ப வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவ ம்ாணவியருக்கும் தேவையான சகலவிதமான பாடநூல்களையும் குறித்த காலத்தில் பெற்றுக் கொடுப்பதே கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். ஆகையால், இலவச பாடநூல் கோரல் படிவத்தினை சரியாகப் பூரணப்படுத்திக் குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கும்படி கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பாடநூல்களை அச்சிடுவதற்காக அரசாங்கம் வருடாந்தம் பெருந்தொகையான நிதியைச் செலவிட்டு வருகிறது. ஆதலால் அனைத்துப் பாடநூல்களும் பண ரீதியான பெறுமதியுடையவை. அதனால் தேவைக்கேற்ப பாடநூல்களைக் கோருவதும், எஞ்சியதைக் களஞ்சியப்படுத்துவதும், பாதுகாப்பதும் உரிய அதிகாரிகளின் கடமை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## தரவட்ட செயற்பாடுகள்

(துணுக்காய்)

முல்லை மாவட்டத்திலுள்ள துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள விஞ்ஞான ஆசிரியர்களின் தரவட்ட செயற்பாடு ஒன்று நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மோகனகாந்தன் அறிவித்துள்ளார்.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இச்செயற்பாடு இடம் பெறவுள்ளதாகவும், தொடர்ந்தும் ஏனைய பாட ரீதியான தரவட்டச் செயற்பாடுகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (42)

## போசாக்கு உணவு முத்திரை வழங்கப்படவுள்ளன

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி நிவாரணமாக ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளையுடைய தாய்மாருக்கு போசாக்கு உணவு முத்திரைகள் இன்று காலை 9.00 மணிமுதல் வழங்கப்படவுள்ளதாக தெல்லிப்பழை பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இம்முத்திரைகளுக்குரிய பொருட்களை தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை இல. 2 இல் பெற்றுக்கொள்ளலாம்.

ஜே/212, ஜே/213, ஜே/214, ஜே/217, ஜே/218, ஜே/219, ஜே/220, ஜே/211, ஜே/224, ஜே/227, ஜே/229, ஜே/244 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள இம்முத்திரை பெறத் தகுதியுடையவர்களுக்கே வழங்கப்படவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (22)

## யாழ். மாவட்ட பாடசாலைகளில் கட்டாயக் கல்விக்குழு அமைக்க ஏற்பாடு

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கட்டாயக் கல்விக் குழுக்களை மீள அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடமாகாண கல்வித் திணைக்களம் சகல கல்வி வலயங்களையும் கேட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களின் இடைவிலகல், ஒழுங்கீனமான வரவு தொடர்பாக அடிக்கடி முறைப்பாடுகள் கல்வித் திணைக்களத்திற்குக் கிடைத்து வருகிறது.

இவற்றை நிறுத்தி மாணவர்களின் வரவு ஒழுங்கினைச் சீர்செய்யும் முகமாகவும்இடைவிலகல் மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யுனிசெவ் நிறுவனம் கல்வித் திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சகல பாடசாலைகளிலும் கட்டாயக் கல்விக்குழுக்களை அமைக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய பாடசாலை அமைந்துள்ள பகுதி கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், பாடசாலை அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி, சிரேஷ்ட ஆசிரியர் ஆகியோர் உள்ளிட்ட குழு விபரத்தை இம்மாதம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக சகல பாடசாலைகளும் வலயக் கல்வி அலு வலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 14 வயதிற்குட்பட்ட இடைவிலகல் மாணவர்களின் விபரத்தைத் தனியாகவும், தரம் 10 தொடக்கம் தரம் 13 வரை வரவு ஒழுங்கீனமான மாணவாகளின் விபரத்தை தனியாகவும் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (109)



நல்லூர் கோட்டப்பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிபர்களுக்கான சேவைநலன்பாராட்டு நிகழ்வு கோண்டாவில் இந்துமகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது.. (10)

## வீதிகள் புனரமைப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் மாநகர சபைகுட்பட்ட 24 வீதிகள் எதிர்வரும் மாதங்களில் காபற் வீதிகளாக மாற்றியமைக்கப்படவுள்ளன.

இந்த வீதிப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கள் பெறப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தம் கைச்சாத்தாகி அடுத்த மாதம் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார் (10)

## கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தப் பணிப்பு

(காரைநகர்)

காரைநகரில் விவசாயிகளுக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பணித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் விவசாய சம்மேளன பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பராமரிப்பாளர்கள் அற்ற கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்து, அவற்றில் பசுக்களை வளர்க்க விரும்புவோருக்கு விற்கவும், காளைகளை ஏலத்தில் விடவும் பிரதேச சபையினர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

பராமரிப்பாளர் இருந்தும் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளைப் பிடித்து உரிமையாளர்களிடம் தண்டம் அறவிடுவதுடன், பராமரிப்புச் செலவையும் பிரதேச சபை அறவிட வேண்டும்.

எதிர்வரும் பெரும்போக நெற்செய்கையின் முன் இந்நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டு விவசாயிகளின் பிரச்சினையை தீர்த்து வைக்க பிரதேச சபையினர் முழுமூச்சுடன் செயற்பட வேண்டும்.

மேலும் இந்நடவடிக்கை சம்பந்தமாக பிரதேச பொலிஸ், இராணுவ, கடற்படை அதிகாரிகளுடனும், விவசாய சம்மேளனம், கிராம அபிவிருத்திச் சங்கங்களுடனும் கலந்துரையாடி ஒருமாத காலத்தினுள் அறிக்கை சமர்ப்பிக்கும் படியும் அவர் பணித்துள்ளார். (86)

'வேலியே பயிரை மேயுது' எண்டு கேள்விப் பட்டிருப்பியள்! இதை நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்ளேலாம இருக்கு.

அதென்னெண்டு நடக்குமெண்டு வாதாடுற யதார்த்தவாதியளும் இருக்கினம். அதேவேளை பின் நவீனத்துவமெண்டு ஒண்டிருக்குதெல்லே அவையளுக்கு இது நல்லாப் பொருந்தும்.

இது இண்டைக்கு நேற்று வந்த சொல்லே பாருங்கோ! எல்லாம் ஒரு குறியீடுதான்.

இதையேன் நான் சொல்ல வந்தனானெண்டா, இண்டைக்கு உந்தமாதிரியான விசயங்கள் மெத்திப்போச்சு.

எங்க பாத்தாலும் உந்த நிலைமைதான் இருந்து வருகுது. வீடுகளை எடுத்துக்கொண்டாலும் சரி, நாடு நகரம், நிர்வாகம் எங்கேயும் எல்லாத்திலும் வேலியே பயிரை மேயிற காரண காரியங்கள்தான் நடக்கு.

தகப்பனை நம்பி வயதுக்கு வந்ததென்ன வராத சின்னஞ் சிறிசுகளைக்கூட விட்டிட்டுப் போகேலாது.

உப்புடித்தான் கோப்பாயில நடந்ததெண்டு பேப்பரில ஒரு செய்தி வந்தது. பெண்சாதியை அடிச்சவுடன அவ சின்னனொண்டை விட்டுட்டு மூத்ததைக் கூட்டிக்கொண்டு தாய் வீட்டை போட்டா!

மறுநாள் வர சின்னன் கண்ணைக் கசக்கிக்கொண்டிருக்கத்தான் விசயம் தெரிய வந்தது.

உப்புடிச் சிறுவர் துஷ்பிரயோகம் எண்டுறது இஞ்சை மட்டுமே நடக்கு?

பாடம் படிக்க பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினா அங்க வாத்தி பிரச்சினை எண்டு செய்தி வருது. எவ்வளவுதான் ரகசியமாவைச்சாலும் மாசங்கள் போகப் போக வெளிவரத்தானே செய்யும்.

நாட்டில சட்டம் ஒழுங்குகளை நிலைநிறுத்தி ஒரு நிர்வாகமே நிர்ணயிக்கப்பட்டிருக்கு. அங்கதான் இது மிகக் கூடுதலாக நடக்கு. அல்ல இதை எப்பிடிச் சொல்லுறது. இல்லத் தெரியாமல் கேக்கிறன். இதுகளைப் பாத்துத்தான் அந்தக் காலத்திலயே வேலியே பயிரை மேயுதெண்டு சொல்லியிருக்கிறாங்கள் எண்டால் அந்தக் காலங்களிலும் இதுகள் நடந்துதான் இருக்கு.

உப்புடித்தான் பாருங்கோ உந்த யாழ்ப்பாணரவுணில இருக்கிற பஸ்ராண்ட் பகுதிகளில இரவில வேலியளாத் திகழ வேண்டியவை பிச்சைக்காறியளைக் கூட விடுகினமில்ல எண்டு கேள்வியாக் கிடக்கு.

நல்ல யாழ்ப்பாணமெல்லே. இதை நாலைஞ்சு வட்டுகள் கவனிச்சு வைச்சு வேலியளுக்குச் செம்மையாக் குடுத்தனிப்பினதுகளாம். பின்னையென்ன வேலியளுக்கு ஏன் இந்த மேச்சல் குணம்?



பரமர் சங்கமம்

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(22.06.2011 – புதன்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம் ஆனி 07 ஆம் நாள்.

இராகுகாலம 11.54–1.24, சுபநேரம் 4.24 –5.54

நட்சத்திரம் சதயம் காலை 7.45 வரை

திதி: ஸப்தமி பி.இ 5.40 வரை.

### இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை

**மேடம்:–** குடும்ப நலம் பாதிப்பு, தேகம் சுகக்குறைவு, மருத்துவச் செலவு, கடன் தொல்லை, ஆலய வழிபாடு.

**ரிஷபம்:–** குடும்பத்தில் குதூகலம், பண வரவு, நண்பர் தொல்லை, உடல்நலம் பாதிப்பு, மன மகிழ்ச்சி.

**மிதுனம் :–** பணக் கஷ்டம், உடல் நலம் பாதிப்பு, காரியத்தடை, மனத்துயர், கவலை.

**கடகம்:–** பண வரவு, தேக ஆரோக்கியம், நண்பர் வருகை, ஆலய வழிபாடு, குடும்பத்தில் மகிழ்ச்சி.

**சிம்மம்:–** பண வரவு, உடம்பு நல்ல சுகம், மூத்தோர் ஆசி, குடும்பத்தில் மகிழ்ச்சி, தியாகம்.

**கனனி :–** உடம்பு சுகக் குறைவு, புத்திரர் கவலை, பணக் கஷ்டம், கடவுள் வணக்கம், விபத்து வரலாம்.

**துலாம் :–** பணக் கஷ்டம், உடல் நலம் பாதிப்பு, குடும்பத்தில் சலனம், நண்பர் தொல்லை, கவலை.

**விருச்சிகம்:–** ஆலய வழிபாடு, பண வரவு, தேக ஆரோக்கியம், தூரத்திலிருந்து நல்ல செய்தி, மகிழ்ச்சி.

**தனுசு:–** பணக் கஷ்டம், உடம்பு சுகக் குறைவு, மருத்துவச் செலவு, கோயில் வணக்கம், கவலை.

**மகரம்:–** குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், உடல் நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு, புத்திரரால் கவலை.

**கும்பம் :–** பண வரவு, தேக ஆரோக்கியம், மன மகிழ்ச்சி, தனலாபம், இல்லத்தில் அமைதி.

**மீனம்:–** கல்யாணப் பேச்சு, சுபகருமம், காரிய சித்தி, பண வரவு, தியாகம்.

# வடமாகாண பாடசாலை மட்ட பெரு விளையாட்டுப் போட்டி

## கிரிக்கெட் போட்டி விக்ரோறியா சம்பியன்

(வவுனியா)

வடமாகாண கல்வித் திணைக் களத்தினால், வடமாகாண மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது தடவையாகவும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வடமாகாண சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தமிழ் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வடமராட்சி பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி 10 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

81 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை 10 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களை பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

## யாழ். மாவட்ட பாடசாலைகள் வலைப்பந்தாட்டத்தில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான வலைபந்தாட்டப் போட்டியில் அனைத்து இடங்களையும் யாழ். மாவட்டப் பாடசாலைகள் கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளது.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் வவுனியாவில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்றும், நேற்று முன்தினமும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

15 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதின. இதில் 18 : 8 என்ற புள்ளிகள் அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 29 - 6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டனது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை வட இந்துக் கல்லூரி அணியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. இதில் பருத்தித்துறை வட இந்துக் கல்லூரி அணி 26 : 22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இதேவேளை, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

19 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. இதில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 29:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இதில் மூன்றாமிடத்தை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது. வெற்றியீட்டிய அணிகளுக்கான வெற்றிக் கேடயங்களையும், சான்றிதழ் களையும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா வழங்கிக் கௌரவித்தார். (12)

விளையாட்டு செய்திகள்

## உடற்பயிற்சிப் போட்டி ஹென்றியரசர் சம்பியன்

(வவுனியா)

உடற்பயிற்சிப் போட்டியில் வடமாகாண சம்பியனாக இளவாலை சென் ஹென்றியரசர் கல்லூரி தெரிவானது. வடமாகாண பாடசாலைகளுக்கிடை யிலான உடற்பயிற்சிப் போட்டி வவுனியாவில் நடைபெற்றது. இதில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை இளவாலை சென் ஹென்றி கல்லூரியும், இரண்டாமிடத்தை ஊர்காவற்றுறை சென். அன்ரஸ் கல்லூரியும், மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியும், இரண்டாமிடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரியும், மூன்றாமிடத்தை இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையும் பெற்றுக் கொண்டன. (39)

## வலைப்பந்தாட்டப் போட்டியின் 15 வயதுப் பிரிவு முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள்



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி



பருத்தித்துறை வட இந்துக் கல்லூரி



கொக்குவில் இந்துக் கல்லூரி

## யாழ். இந்து த்ரில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி ஒரு விக்கெட்டால் த்ரில் வெற்றிபெற்றது.

இப்போட்டி நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 17 வயதுப் பிரிவினருக்கான இப்போட்டி சிநேகபூர்வமாக இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி 36 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 36.4 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்துவெற்றியிலக்கை அடைந்தது. (17)

## 36 வருட சாதனை முறியடிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட செயலகத்தினால் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் 36ஆண்டுகள் சாதனையை ரவி றஜிகரன் முறியடித்துள்ளார்.

ஆண்களுக்கான 1500 கிலோ மீற்றர் ஓட்டப் போட்டியில் 36 ஆண்டுகாலம் முறியடிக்கப்படாதிருந்த சாதனையை குடத்தனை வடக்கினைச்சேர்ந்த வீரர் ரவி றஜிகரன் குறித்த தூரத்தினை 4.20.00 விநாடிகளில் கடந்து, ஏற்கனவே சாதனையாக படைக்கப்பட்டிருந்த 4.20.02 விநாடிகள் என்பதனை முறியடித்து புதிய சாதனை படைத்தார்.

ஏற்கனவே இடம் பெற்ற 5000கிலோ மீற்றர் ஓட்டப் போட்டியில் சாதனை படைப்பதற்குரிய சந்தர்ப்பம் இருந்த போதிலும் 11 செக்கன்கள் தாமதமானதால் புதிய சாதனை படைக்கத் தவறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2011ஆம் ஆண்டின் யாழ். மாவட்ட விளையாட்டு நிகழ்வில் றஜிகரன் தான் பங்குபற்றி முறையே 10000 கிலோ மீற்றர் மற்றும் 5000 கிலோ மீற்றர், 1500 கிலோ மீற்றர் ஆகிய மூன்று ஓட்ட நிகழ்வுகளிலும் தங்கப்பதக்கங்களினை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் போட்டித் தொடர்

(யாழ். நிருபர்)

மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலையத்தின் 54ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு தென்மராட்சிக் குட்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

இப்போட்டித் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகள் இன்று புதன்கிழமை கண்ணகை விளையாட்டுக்கழகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அதன் செயலாளர் தெரிவித்துள்ளார். (10)

## மரதனோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகாவிதித்தியாலயத்தின் 90ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆண், பெண்களுக்கான மரதனோட்டப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட ரீதியில் நடாத்தப்படவுள்ள இம்மரதனோட்டப் போட்டியில் பங்குகொள்ள வீர, வீராங்கனைகளிடம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பங்குகொள்ள விரும்புவோர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பாடசாலை நிர்வாகத்தினருடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் தவறும் பட்சத்தில் போட்டி இடம்பெறும் வேளை, தங்கள் பதிவுகளை மேற்கொண்டு போட்டியில் பங்குபற்ற முடியும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்.

போட்டி அன்று காலை 6.00 அணிக்கு ஆரம்பமாகுமெனவும் தெரிவிததனர்.

## திருத்தப்படாத பொது மைதானம் போட்டிகளை நடத்துவதில் சிரமம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கின் மையப் பகுதியில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானம் கடந்த பல வருடங்களாகத் திருத்தப்படாமையினால் விளையாட்டுப் போட்டிகள் நடாத்து வதில் பல்வேறு கஷ்டங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

இவ்விளையாட்டு மைதானம் போட்டிகள் நடாத்துவதற்கு உகந்த நிலையில் இல்லாத காரணத்தினால் அண்மையில் நடைபெற்ற வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச மட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான மெய்வன்மை போட்டி இறுதி நாள் நிகழ்வுகள் வடமராட்சி கிழக்குப் பிரதேச கிழக்கெல்லையிலுள்ள ஆளியவளைக் கிராமத்தில் நடைபெற்றது. இதனால் இப்பிரதேசத்திலுள்ள 20 வரையான விளையாட்டுக்கழகங்களில் ஐந்து கழகங்கள் மட்டுமே இறுதிப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தன.

ஆகவே, இப்பிரதேசத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள பொதுவிளையாட்டு மைதானத்தைத் திருத்தி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென விளையாட்டுக்கழகங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (70)

# இலங்கை கிரிக்கெட் சபைக்கு பொருளாதார நெருக்கடி இல்லை

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபைக்குப் பொருளாதார நெருக்கடி எதுவும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கை கிரிக்கெட்டின் நடைமுறைக் கணக்கில் 10 மில்லியன் ரூபாய் இருப்பதாகவும் அதில் நிலுவைகள் எதுவும் இல்லை என்றும் இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபை கூறியுள்ளது.

எனினும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான தனியான கணக்கிற்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) நிதி வரவேண்டியுள்ளதால், தற்போது 220 மில்லியன் ரூபா வழங்க வேண்டியுள்ளதாக இலங்கை கிரிக்கெட் கூறியுள்ளது. இலங்கை கிரிக்கெட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி குறித்து உண்மைத் தன்மை பற்றி விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட இலங்கை கிரிக்கெட்டின் பொருளாளர் சுஜீவ ராஜபக்ஷ கூறும்போது, உலகக் கிண்ண கிரிகெட் போட்டிக்காக மூன்று மைதானங்களை அமைப்பதற்கு இலங்கை வங்கியிடம் 20 மில்லியன் டொலரையும் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் 3.5 மில்லியன் டொலரையும் கடனாகப் பெற்றுள்ளோம். இதில் இலங்கை வங்கியிடம் பெற்ற கடனில் 7 மில்லியன் டொலர்களை மீளச் செலுத்தியுள்ளதோடு, ஐ.சி.சியிடம் பெற்ற கடனை மீள செலுத்த 4 ஆண்டுகால அவகாசம் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பல்லேகல, சூரியவெவ மற்றும் ஆர். பிரேமதாச அரங்குகளை அமைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை 3.2 மில்லியன் என்றபோதும் செலவுகள் அதிகரித்ததனால் கடன் 4.4 மில்லியன் ரூபாவாக அதிகரித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் மூலம் இலங்கைக்கு 20.44 மில்லியன் டொலர் கிடைக்கவுள்ளதாக குறிப்பிட்ட சுஜீவ ராஜபக்ஷ, தற்போது 7 மில்லியன் டொலர்கள் இலங்கைக்கு கிடைத்துள்ளதாகவும் செலவினங்கள் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின் ஐ.சி.சி. எஞ்சிய தொகையை விடுவிக்கும் எனவும் தெரிவித்தார்.

இதில் உலகக் கிண்ண போட்டிக்கான மைதானங்களை அமைப்பதற்கு மட்டும் இலங்கை கிரிக்கெட் நிதி வழங்கியது. உலகக் கிண்ணத்திற்கான ஏனைய செலவுகள் அனைத்தும் ஐ.சி.சியே பொறுப்பேற்றுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.



# டெய்லர் தலைவர்

(ஹமில்டன்)

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவராக ரோஸ் டெய்லர் நியமிக்கப் பட்டப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ணத் தோல்விக்குப் பின்னர் தலைவர் பதவியில் இருந்து டேனியல் வெட்டோரி விலகியதைத் தொடர்ந்து அப்பதவிக்கு ரோஸ் டெய்லர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக ரோஸ் டெய்லரும், பிரண்டன் மக்கலமும் தலைவர் பதவிக்கான போட்டியில் இருந்தனர். ரோஸ் டெய்லரின் பெயரை நியூசிலாந்து கிரிக்கெட்டின் இயக்குனர் ஜான் பச்னன், தேசிய பயிற்சியாளர் ஜோன் ரைட் மற்றும் தேசிய தேர்வுக் குழு மேலாளர் மார்க் கிரீட்பேட்ச் ஆகியோர் பரிந்துரைத்தனர்.

இதையடுத்து அவரை நியூசிலாந்து கிரிக்கெட் சபை ஒரு மனதாகத் தெரிவு செய்தது.

## பிறிமியர் லீக் சுற்றுப் போட்டி குறித்து இந்திய அதிகாரிகளுடன் இன்று பேச்சு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட்டின் தலைவர் டி.எஸ்.டி சில்வா மற்றும் செயலாளர் நிசாந்த ரணதுங்க ஆகியோர் சிறிலங்கா பிரிமியர் லீக் சுற்றுப்போட்டி குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகளுடன் இன்று பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பிரிமியர் லீக் போட்டிகளில் இந்திய வீரர்கள் பங்குபற்றுவதற்கு இந்திய அதிகாரிகளை சம்மதிக்கச் செய்வதற்காக இலங்கை கிரிக்கெட்டின் தலைவரையும் செயலாளரையும் இந்தியாவுக்கு விரையுமாறு நான் கூறியுள்ளேன் என அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது இலங்கை வீரர்களுடன் லண்டனிலுள்ள இலங்கை கிரிக்கெட் தலைவர் லண்டனிலிருந்து நேரடியாக இந்தியா செல்வார். ரணதுங்க, இலங்கையிலிருந்து சென்று அவருடன் இணைந்துகொள்வார்.

இந்தியாவுடன் எமக்கு நல்லுறவு உள்ளது. இப்பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படும் என்பது நிச்சயம் எனவும் அவர் தெரிவித்தார்.

இப்போட்டிகள் ஜூலை 19 முதல் ஒகஸ்ட் 4 ஆம் திகதிவரை நடைபெறும் எனவும் ஐ.பி.எல்லின் முன்னாள் தலைவரான லலித் மோடிக்கு சிறிலங்கா பிரிமியர் லீக் போட்டிகளுடன் தொடர்பு எதுவுமில்லை என தான் உறுதியளிப்பதாகவும் அமைச்சர் அளுத்கமகே கூறினார்.



## சவாலுக்குத் தயார்

மான்செஸ்டர் யுனைடெட் கிளப் அணிக்குள் நுழைவதன் மூலம் பெரும் சவாலுக்கு தயார் ஆவதாக பில் ஜோன்ஸ் தெரிவித்தார். பில் ஜோன்ஸ் நியூ இங்கிலாந்து 21 வயதுக்கு உட்பட்ட அணியின் கப்டன் ஆவார். 19 வயது வீரர் பில் ஜோன்ஸ் கடந்த வாரம் சர்பெர் குசன் அணிக்கு செல்லும் நடவடிக்கையை பூர்த்தி செய்தார். இதற்காக அவருக்கு 165 இலட்சம் பவுண்ட் சம்பளம் பேசப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

யுனைடெட் அணியின் புதிய வரவாக வரும் பில் ஜோன்ஸ், சர்வதேச மத்திய பின் களவீரர் கிறிஸ் ஸ்மாலிங் போன்ற வீரர்களுடன் இணைகிறார். இந்தப் பூமியில் பெரும் கால்பந்து கிளப்புகள் உள்ளன. மான்செஸ்டர் யுனைடெட் கிளப் அணிக்கு செல்லும் நடவடிக்கை எனக்கு மிகப் பெரிய ஒன்றாக உள்ளது. அது போன்று மிகப்பெரிய சவாலையும் எதிர் கொள்ள வேண்டி உள்ளது என பில் ஜோன்ஸ் தெரிவித்தார். மான்செஸ்டர் அணிக்காக உடனடியாக ஆடுவதற்கு தயாராகி உள்ளேன். என்னால் காத்திருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

# மேற்கிந்திய பந்துவீச்சில் சுருண்டது இந்திய அணி

(கிங்ஸ்டன்)

இந்திய - மேற்கிந்திய அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் இங்ஸ்டனில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் விக்கெட்டுகள் மேற்கிந்திய அணியின் வேகப்பந்து வீச்சில் மளமள என்று சரிந்தன. 85 ஓட்டங்கள் எடுப்பதற்குள் இந்திய அணி 6 விக்கெட்டை இழந்தது. எட்வேர்ட்ஸ், ராம்போல், பிஷு ஆகியோரின் பந்து வீச்சில் இந்திய முன்னணி துடுப்பாட்டவீரர்கள் சரண் அடைந்தனர். இறுதியில் இந்திய அணி அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 246 ஓட்டங்களை எடுத்தது. இதில் சுரேஷ் ரெய்னா 82, ஹர்பஜன்சிங் 74, ராடில் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எட்வேர்ட்ஸ் 4 விக்கெட்டும், ராம்போல், பிஷு தலா 3 விக்கெட் கைப்பற்றினார்கள்.

பின்னர் முதல் இனிங்சை விளையாடிய மேற்கிந்திய அணி ஆட்ட நேர முடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 34 ரன் எடுத்து இருந்தது. அட்ரியன் பரத் 26 ரன்னுடனும், சர்வான் 2 ரன்னுடனும் ஆட்டம் இழக்காமல் உள்ளனர். சிம்மன்ஸ் 3 ரன்னில் இஷாந்த் சர்மா பந்தில் ஆட்டம் இழந்தார்

## இந்திய இளம் வீரர்களின் ஆட்டம் ஏமாற்றம் அளிப்பதாக அக்ரம் கவலை

(லாகூர்)

இந்திய கிரிக்கெட் அணியில் இடம் பெற்றுள்ள இளம் வீரர்களின் ஆட்டம் தனக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் வாசிம் அக்ரம் தெரிவித்துள்ளார். இது குறித்து இணையதளம் ஒன்றில் அவர் மேலும் கூறியிருப்பது: மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் இந்திய அணி 3-2 என்ற கணக்கில் வென்றுள்ளது. இருந்த போதிலும் அணியில் இடம் பெற்றிருந்த இளம் வீரர்களது ஆட்டம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை.

ஐபிஎல் போட்டிகளில் சிறப்பாக ஆடிய அவர்கள், மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் ஏமாற்றத்தையே அளித்துள்ளனர். முக்கியமாக பத்ரிநாத், ஷகர் தவாண், பார்த்தீவ் பட்டேல், மனோஜ் திவாரி ஆகியோரது ஆட்டம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. அவர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இந்திய அணியில் இப்போது ஆடி வரும் சச்சின், திராவிட், லட்சுமண் போன்றவர்கள் சிறப்பான வீரர்கள். பல ஆண்டுகாலமாக அவர்கள் சிறப்பாக ஆடி வருவதுடன், எப்போதும் முழு உடற்தகுதியுடன் உள்ளனர் என்று அக்ரம் மேலும் கூறியுள்ளார்

**விம்பிள்டன் ரென்னிஸ்**

## 2ஆவது சுற்றில் நடால், வீனஸ்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிகளின் 2ஆவது சுற்றிற்கு ரபேல் நடாலும், வீனஸ் வில்லியம்ஸும் முன்னேறியுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டியில் உலகத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள ரபேல் நடால் அமெரிக்காவின் மைக்கேல் ரஸ்ஸலை 6-4, 6-2, 6-2 என்ற நேர் செட்களில் வென்று 2ஆவது சுற்றிற்கு முன்னேறினார்.

மகளிர் பிரிவில் உலகத் தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள ரஷ்யாவின் வேரா ஸ்வானரீவா அமெரிக்காவின் அலிசன் ரிஸ்கேவை 6-0, 3-6, 6-3 என்ற செட்கள் கணக்கில் வென்று 2ஆவது சுற்றிற்கு முன்னேறினார். மற்றொரு முதல் சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், உஸ்பெகிஸ்தானின் அமான் முரடோவாவை 6-3, 6-1 என்ற நேர் செட்களில் எளிதாக வென்றார்.



## தகுதிச்சுற்றில் இந்தியா தோல்வி

(டோஹா)

ஒலிம்பிக் கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்திய அணி கட்டாரிடம் 1-3 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. கட்டார் தலைநகர் டோஹாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த ஆட்டம் நடைபெற்றது. இந்தத் தோல்வியால் இந்திய அணி ஒலிம்பிக் வாய்ப்பை முற்றிலுமாக இழந்து விடவில்லை. லண்டனில் 2012 இல் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ளது.

# ஜே.ஆரின் தோல்வியடைந்த திட்டங்களை முன்னெடுக்கிறார் ஜனாதிபதி மகிந்த

## குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜய வர்தனாவின் தோல்வியடைந்த திட்டங் களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னெடுத்து வருவதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

ஜே.ஆர். ஜயவர்தனாவின் ஆட்சி அதி கார மற்றும் பொருளாதாரக் கொள்கை களையே ஜனாதிபதி பின்பற்றி வருவ தாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீடுகளை அடிப்படை யாகக் கொண்ட பொருளாதாரக் கொள் கைகளை ஜே.ஆர். பின்பற்றியதாகவும், அதனையே தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பின்பற்றி வருவதாகக் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

அரசாங்கத்தின் சங்கரி லா ஹோட்டல் நிர்மாணத் திட்டத்தை இதற்கு உதார ணமாக காட்ட முடியும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

தேசிய மாணவர் வீரர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து



கொண்ட போது அவர் இதனைத் தெரி வித்துள்ளார்.

ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் ஏற் படுத்தக் கூடிய வகையிலான அரசியல் சாசனத் திருத்தங்களை ஜே.ஆர். ஜயவர் தனாவும் மேற்கொண்டதாக அவர் குறிப் பிட்டுள்ளார்


# விஞ்ஞான ரீதியான தகவல்களுக்கமைய சனல் - 4 இன் காணொளிகள் நிராகரிப்பு

## பிரதியமைச்சர் நியோமல் பெரேரா

(கொழும்பு)

இலங்கைக்கு அகௌரவம் ஏற்படும் வகையில் காட்சிகளை வெளியிட்ட சனல் -4 நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது. எங்களுக்கு கிடைத்துள்ள விஞ்ஞான ரீதியான தகவல்களுக்கு அமைய குறித்த வீடி யோக் காட்சிகளை முழுமையாக நிரா கரிக்கின்றோம் என்று பிரதி வெளி விவகார அமைச்சர் நியோமல் பெரரா தெரிவித்தார்.

சனல்-4 விவகாரம் தொடர்பில் அரசாங்கத்தின் அடுத்தக்கட்ட நட வடிக்கை எவ்வாறு அமையும் என்பது தொடர்பில் விபரிக்கையிலேயே பிரதியமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். நியோமல் பெரேரா இது குறித்து மேலும் குறிப்பிடுகையில் :



சனல்-4 நிறுவனம் இலங்கையை அபகீர்த்திக்கு உட்படுத்தும் வகையில் வெளியிட்ட வீடியோக் காட்சிகளை அரசாங்கம் முழுமையாக நிராகரிக கின்றது. அது முற்றுமுழுதும் எமது நாட்டை அகௌரவப்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ளது.

எங்களுக்கு கிடைத்துள்ள தகவல்கள் சாட்சிகள் மற்றும் விஞ்ஞான ரீதியான ஆதாரங்கள் என்பனவற்றைக்கொண்டு சனல்-4 நிறுவனம் வெளியிட்டக் காட்சி களை நாங்கள் முழுமையாக நிராகரிக்கின்றோம்.

இதேவேளை இலங்கையை அகௌர வப்படுத்தும் நோக்கில் காட்சிகளை வெளியிட்டமை தொடர்பில் சனல்-4 நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கவும் நகர்வுகளை முன்னெ டுத்து வருகின்றோம்.

சர்வதேச சமூகத்துடன் எமது அரசாங் கம் சிறப்பான உறவுகளைப் பேணிவரு கின்றது. ரஷ்யா சீனா என்பன எமக்கு மிகப்பெரிய பக்கபலமாக இருக்கின்றன. அந்த வகையில் யுத்தத்தின் பின்னர் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லும் எமது முயற்சியை முன்னெடுப்போம் என்றார்.

# ஐ.நா.நிபுணர் குழுவின் அடிப்படையில் இலங்கைமீது போர்க்குற்ற விசாரணை

## முன்னாள் வெளிவிவகார அமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

**ஐ.நா நிபுணர்குழு அறிக்கையின் அடிப்படையில் இலங்கை மீது போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று பிரித்தானியா மற்றும் பிரான்ஸின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**



International Herald Tribune ஊட கத்தில் எழுதியுள்ள பத்தி ஒன்றிலேயே பிரித்தானியாவின் முன்னாள் வெளி விவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்ட் மற்றும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச் சர் பேனாட் குச்னர் ஆகியோர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

நிபுணர்குழு அறிக்கையின் மீது ஐ.நா பொதுச்செயலர் உடனடியாக நடவடிக் கை எடுக்க வேண்டும் என்றும் கோரி யுள்ள இவர்கள், இலங்கை அரசு இதற் குப் பதிலளிப்பதற்கு உடனடியாக காலக்கெடு ஒன்றை வழங்க வேண்டும் என்றும் தமது நாட்டு அரசாங்கங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஐ.நா அறிக்கையின் பரிந்துரைகளின் படி இலங்கை அதிகாரிகள் போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்கத் தவறி னால், அனைத்துலக விசாரணைக்கான ஏற்பாடுகளை தொடங்க வேண்டும் என்றும் டேவிட் மில்லி பான்டும், பேனாட் குச்னரும் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

உள்நாட்டு மற்றும் அனைத்துலக சட்டங்களின் படி, பொறுப்புக்கூறுதல் என்பது ஒரு கடமையாகும் என்று வலியுறுத்தியுள்ள இவர்கள், இவற் றுக்குப் பொறுப்பான இலங்கை இரா ணுவ மற்றும் குடியியல் அதிகாரி கள் அனைத்துலக குற்றச்செயல்களுக் காக பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறி யுள்ளனர்.

2009ஆம் ஆண்டு இலங்கைக்கு மேற் கொண்ட பயணத்தின் போது தாம் இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத் தபாய ராஜபக்ஷவிடம் வடக்கில் படை நடவடிக்கைளின் போது பொதுமக்களின் பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்று அழுத்திக் கூறியதா கவும் அவர்கள் தமது பத்தியில் குறிப் பிட்டுள்ளனர்.

# உலகின் பலம் வாய்ந்த ராஜ்ஜியங்கள் சிறிய அரசுகளை வீழ்த்துவதற்கு முயற்சி

## குற்றம் சாட்டுகிறார் அமைச்சர் சிறிபால



(கொழும்பு)

உலகின் பலம்வாய்ந்த ராஜ்ஜியங்கள் சிறிய அரசுகளை வீழ்த்துவதற்கு பல் வேறு வழிகளில் செயற்படுவதாக நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத் துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

லுணுகல பகுதியில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் போதே அவர் இவ் வாறு தெரிவித்தா

லுணுகல பிரதேச செயலாளர் அலுவலக வளாகத்தில் நிர்மாணிக்கப் பட்ட படைவீரர்கள் நினைவுத்தூபியைத் திறந்து வைப்பதற்காக இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யுத்தத்தில் உயிரிழந்த இந்தப் பகுதி யைச் சேர்ந்த 43 இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு, ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா மற்றும் நீர்ப் பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரினால் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

இராணுவ வீரர்கள் ஈட்டிதந்த வெற்றி யையும், அவர்களால் முன்னெடுக் கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையி னையும் மலிவுபடுத்தி அவற்றை இல்லா தொழிப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங் களும் புலம்பெயர்ந்தோரும் மேற்கொள் ளும் சூழ்ச்சிகளை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டுமென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

இவற்றிற்கு தருஸ்மன் அறிக்கையும் சனல்-4 நிறுவனத்தாலும் தயாரிக்கப்பட்ட ஒளிப்பதிவு காட்சிகளையும் பயன்படுத்து வ்தாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அவற்றுக்கு எதிராக உள்நாட்டு ரீதியிலும், சர்வதேச ரீதியிலும மேற்கொள்ளக் கூடிய பணிகளை நிறை வேற்ற அனைவரும் முன்வர வேண்டு மெனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

# ஒளிபரப்பான வீடியோ தகவல்களை சனல் - 4 தருமென எதிர்பார்க்க முடியாது

## நல்லிணக்க ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் யுத்த குற்றம் நடந் ததற்கு ஆதாரமென கூறப்பட்ட, சனல் - 4 தொலைக்காட்சியினால் 2009 ஆம் ஆண்டு ஒளிபரப்பு செய்யப்பட்ட வீடியோ காட்சிகள் பற்றி சனல்-4 தொலைக்காட்சி எழுத்து வடிவில் எந்த விளக்கமும் தர மறுத்தது. இந்த நிலையில் அண்மையில் ஒளிபரப்பிய வீடியோ காட்சிகள் பற்றிய தகவல்களை அது தருமென எதிர்பார்க்க முடியாது என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தெரி வித்தது.

ஜூலை 14 இல் சனல்-4 ஒளிபரப்பிய வீடியோ காட்சிகளை ஆராய இந்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளபோதிலும், இந்த விசாரணையை எவ்வாறு கொண்டு செல்லாம் என இன்னும் தீர்மானிக்க வில்லை என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க கூறினார்.

நாம் முன்னைய ஒளிபரப்பு தொடர் பில் சில பின்புல விபரங்களை சனல்-4 விடம் கேட்டுள்ளோம். வீடியோ எடுக்கப் பட்ட இடம், எடுக்கப்பட்ட நேரம், வீடி யோவை பதிவு செய்தவர்கள் பற்றிய விபரங்களையும் நாம் கோரினோம். ஆனால் எந்த விபரமும் தரப்படவில்லை என அவர் கூறினார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை யில் சனல்-4 பற்றிய சர்வதேச சமூகத் தின் கேள்விகளுக்கு பதில் கூறப்படுமா என்பதற்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு



அது அறிக்கையில் காணப்படும் என விக்கிரமசிங்க கூறினார்.

இதேவேளை இலங்கையில் போர்க் குற்றம் இடம்பெற்றதாக பிரித்தானியா வின் சனல் - 4 தொலைக்காட்சி ஒளி பரப்பிய காணொளித் தொகுப்பு தொடர் பில், விசாரணைகளை மேற்கொள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது குறித்து உடனடி விசாரணை யொன்றை நடத்துவதற்கு எண்ணியுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த சம்பவங்களுக்கு மேலதி கமாக யுத்த காலப்பகுதியில் இடம் பெற்ற சம்பவங்களுக்குரிய புகைப் படங் கள் மற்றும் ஊடக நிறுவனங்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட காணொளிகள் தொடர்பில் இதற்கு முன்னரும் விசா ரணை நடத்தியதாக அவர் மேலும் தெரி வித்தார்.

★ ஒரு புத்தகக் கடையில் 5 மாணவர்கள் தெரிவு செய்த பயிற்சிப் புத்தகங்களின் விபரங்கள் வருமாறு-

| மாணவர்கள் | புத்தகங்கள் |
|---|---|
| தீபன் | தமிழ், ஆங்கிலம், சமயம் |
| ஜீவன் | விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம் |
| சசி | ஆங்கிலம் |
| நாதன் | தமிழ், விஞ்ஞானம் |
| கரன் | விஞ்ஞானம், ஆங்கிலம், சமயம் |

58. கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் தெரிவு செய்த பயிற்சிப் புத்தகம்
1. தமிழ் 2. கணிதம் 3. ஆங்கிலம் 4. சமயம்

59. குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் தெரிவு செய்த புத்தகம்
1. தமிழ் 2. கணிதம் 3. ஆங்கிலம் 4. விஞ்ஞானம்

60. ஆங்கிலத்தைத் தெரிவு செய்த மாணவர் எண்ணிக்கை
1. 1 2. 2 3. 3 4. 4

61. ஒரே ஒரு மாணவனால் மட்டும் தெரிவு செய்யப்பட்ட பயிற்சிப் புத்தகமும் மாணவனும் முறையே
1. சமயம் - தீபன் 2. கணிதம் - ஜீவன் 3. ஜீவன் - சமயம் 4. கரன் - கணிதம்

62. ஆங்கிலத்தைத் தெரிவு செய்யாத மாணவனும் விஞ்ஞானத்தைத் தெரிவு செய்த மாணவர் எண்ணிக்கையும் முறையே
1. நாதன், 3 2. நாதன், 4 3. 4, சசி 4. நாதன், கரன்

63. தமிழைத் தெரிவு செய்தோர்
1. ஜீவன், சசி 2. தீபன், 3. சசி, நாதன் 4. தீபன், நாதன், கரன்

64. புத்தகக் கடை என்பதன் ஆங்கிலப் பதம்
1. Book shop 2. Book shap 3. Book Center 4. Book Depo

65. விஞ்ஞானம், ஆங்கிலம் என்ற இரு புத்தகங்களையும் தெரிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை.
1. 1 2. 2 3. 3 4. 4

66. சசி என்ற மாணவன் தனது புத்தகத்தை இரவல் கொடுக்க வேண்டி ஏற்படின், அவனிடம் இரவல் கேட்கக் கூடிய மாணவன் யார்?
1. தீபன் 2. நாதன் 3. கரன் 4. ஜீவன்

67. நாதனுக்கு இரவல் கொடுக்கக் கூடியவர்களில் மிகவும் பொருத்தமானவர்கள்
1. தீபன், கரன் 2. ஜீவன், தீபன் 3. சசி, ஜீவன் 4. கரன், சசி

| புடோல், கத்தரி, தென்னை, பூசணி, மிளகாய், பனை, அறுகு, தேயிலை, இறப்பர் மரம் |
|---|

**மேலே தரப்பட்ட தாவரங்களை அடிப்படையாகக் கொண்டு, கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

68. படர்ந்து வளருபவை எவை?..........
69. செடியினத்தைச் சேர்ந்தவை எவை?..........
70. இலங்கையில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பயிரினங்கள் எவை?..........
71. யாழ்ப்பாணத்தின் கற்பகதரு என அழைக்கப்படுவது எது?..........
72. எண்ணெய் உற்பத்தியில் பயன்படுவதும், பெரும்பாலும் கரையோரங்களில் நன்றாக வளர்வதுமான மரம் எது?
..........
73. "தேயிலை" என்பதன் ஆங்கிலப் பதம் என்ன?..........
74. இலங்கையில் தேயிலை வளரும் பிரதேசங்களில் அமைந்த நான்கு நகரங்கள் எழுதுக.
1.......... 2.......... 3.......... 4..........
75. இலங்கையில் தேயிலையை அறிமுகப்படுத்திய நாட்டவர் யார்?..........
76. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்கே அமைந்துள்ளது?..........
77. உலகில் தேயிலை பயிரிடும் மூன்று நாடுகளின் பெயர்களை எழுதுக.
1.......... 2.......... 3..........
78. இலங்கையில் இருந்து தேயிலையை வாங்கும் ஒரு நாட்டின் பெயரை எழுதுக..........
79. "கல்வியின் சிறப்பு" என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய், பயனிலையுடன் கூடிய வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது 4 சொற்களாவது இருத்தல் வேண்டும்.
80..........
81..........
82..........
83..........
84..........
85..........





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II
1மணி 15 நிமிடம்

# கல்விமுரசு

வெளியீடு 19



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**கீழே உள்ள கூட்டுக்குள் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளை வாசித்து அதன் கீழ்தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

இல.14, தூய அன்னை வீதி, பண்டத்தரிப்பு கிழக்கில் வசிக்கும் செல்வி பவித்திரா பன்னீர்செல்வம் தரம் 5 வகுப்பில் பண்டத்தரிப்பு இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்கிறார். அவர் கடந்த 22.06.2001 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரமாகிய விளம்பரம் ஒன்றைப் பார்த்து அதன் பிரகாரம் செயற்பட விரும்பினார்.

மாணவச் செல்வங்களே... தபால் மூலக்கல்வி.....

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பயிற்சி வினாத்தாள்கள் தபால் மூலம் உங்கள் வீடுகளுக்கு விடைகளுடன் வரும். அவற்றினூடாக உங்கள் திறன்களை வளர்த்து நீங்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையலாம். நீங்கள் செய்ய வேண்டியது. கீழே தரப்பட்டுள்ளது போன்ற ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்து பதிவுத்தபாலில் " தபால் மூலப் பயிற்சி நெறி", இல.38, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அனுப்பி வையுங்கள். வாராந்தம் உங்கள் வீடுகளுக்கு வினாத்தாள் அனுப்பி வைக்கப்படும். எல்லாப் பரீட்சை வினாத்தாள்களுக்குமாக ரூபா 300 இற்கான காசுக்கட்டளையை அண்மையில் உள்ள தபாலகத்தில் பெற்று அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்ப வேண்டிய தபாலுறை கீழேயுள்ளது.

(1) (2)
(3) (4)
(5) (6)

**தபால் மூலப் பயிற்சி நெறி வினாத்தாள் - விண்ணப்பம்**

01. மாணவர் பெயர் :..........
02. கல்வி கற்கும் தரம் :..........
03. கல்வி கற்கும் பாடசாலை :..........
04. தபால் முகவரி :..........
05. தந்தை/தாய்/பாதுகாவலர் பெயர் :..........
06. தேவையான வினாத்தாள் எண்ணிக்கை :..........

..........
07. மாணவர் ஒப்பம்

★ மேலே உள்ள விண்ணப்பப் படிவத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்பு.
★ தபால் உறையில் கீழ்வரும் இடங்களில் அமைய வேண்டிய சரியான தகவல்களை எழுதுக.

08. ..........
09. ..........
10. ..........
11. ..........
12. ..........
13. ..........

★ எமது சூழலில் பல்வேறு வகையான பூச்சிகள், பறவைகள், விலங்குகள் காணப்படுகின்றன. பறவைகள், பூச்சிகள் தாவரங்களிலுள்ள காய்கள், புழுக்கள், மீனினங்கள் என்பவற்றை உணவாகக் கொள்கின்றன.

14. "பறவை" என்னும் சொல்லின் கருத்தை ஆங்கில மொழியில் எழுதுக.
..........
15. பறவை என்னும் சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல் ஒன்றை எழுதுக.
..........

16. “சமாதானப் பறவை” எது?

..........................................................................................

17. பேசக் கற்றுக்கொடுக்கக் கூடிய பறவை ஒன்றின் பெயரை எழுதுக.

..........................................................................................

18. இராக் காலத்தில் வானத்தில் பறக்கக்கூடிய பறவை ஒன்றின் பெயரை எழுதுக.

..........................................................................................

19. வேட்டை ஆடும் பழக்கமுடைய பறவை ஒன்றின் பெயரை எழுதுக.

..........................................................................................

20. பறக்கும் ஆனால் பாலூட்டும்அங்கி ஒன்றின் பெயரை எழுதுக.

..........................................................................................

21. பறவைகள் மூலம் விவசாயிகள் பெறும் நன்மை ஒன்றையும், தீமை ஒன்றையும் எழுதுக.

..........................................................................................

கீழே ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ள பறவைகளின் பெயர்களைத் தமிழில் தருக.

22. CROW :.................................................. 23. PARROT :..................................................

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பறவைகளின் சிறகுகளின் நிறத்தை ஆங்கில மொழியில் எழுதுக.

24. காகம் :.................................................. 25. கிளி:..................................................

பாடசாலை விளையாட்டுப் போட்டி ஒன்றில் நீளம் பாய்தல்போட்டியில் போட்டியாளர் நால்வர் பெற்றுக் கொண்ட நீளங்களின் அளவுகளைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| போட்டியாளர் பெயர் | பாய்ந்த நீளம் |
|---|---|
| உமறுப் மன்சூர் | 200 cm |
| இராசையா | 2.5 m |
| பண்டரா 2.2 | m |
| அபூபக்கர் | 2 m 25 cm |

26. நீளம் பாய்தல் போட்டியில் 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றவர்களின் பெயர்களை எழுதுக.
1ஆம் இடம் .................................. 2ஆம் இடம் .................................. 3ஆம் இடம்..................................

27. பாய்ந்த நீளங்களின் அளவுகளை ஏறுவரிசைப்படுத்தி அக்குறித்த நீளங்களுக்குரிய போட்டியாளர் பெயர்களை முறையே எழுதுக..........................................................................................

28. தமிழ் நெடுங்கணக்கின் அகராதி ஒழுங்கிற்கு அமைய போட்டியாளர் பெயர்களை முறையே எழுதுக.

..........................................................................................

29. முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர்கள் பாய்ந்த நீளங்களின் மொத்தப் பெறுமதியை மீற்றர், சென்ரி மீற்றரில் எழுதுக.

..........................................................................................

30. இப்பாடசாலையில் பல இன மக்களும் தமது பிள்ளைகளை கல்வி கற்க அனுப்புகின்றனர். இக்கூற்று உண்மையானதா? உமது விடைக்குரிய காரணத்தை எழுதுக.

..........................................................................................

☆ உணவுப்பொருட்கள் பல்வேறு காரணங்களினால் பழுதடைகின்றன. ஆனால் சில இடங்களில் உணவு விரயமாதலும் நடைபெறுகின்றது. பழுதடைந்த உணவை பழுதடையாது காப்பது நம் கடமையாகும்.

☆ கீழே பழுதடைந்த உணவுப் பொருளும் அதில் அவதானிக்கத்தக்க மாற்றங்கள் சிலவும் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியானவற்றுக்கு எதிரே ‘X’ எனவும் பிழையானவற்றுக்கு எதிரே ‘O’ எனவும் அடையாளமிடுக.

| உணவுப் பொருள் | பழுதடைந்த பின் அறிகுறிகள் | |
|---|---|---|
| 31. போஞ்சி | மென்மையாகி கறுப்புப் புள்ளிகள் தோன்றுதல் | |
| 32. மீன் | துர்நாற்றம், பூ மங்கியிருத்தல் | |
| 33. மாம்பழம் | சுவை அதிகரித்தல் | |
| 34. முட்டை | துர்மணம் வீசுதல் | |





☆ கீழ்வரும் அட்டவணையானது உணவுப் பொருட்களும் அவை விரயமாகும். வழிமுறையயும் காண்பிக்கின்றது. இதை வாசித்து விளங்கி இவ்வாறு விரயமாவதைத் தடுப்பதற்குரிய உமது ஆலோசனைகளை எழுதுக.

| உணவுப் பொருள் | வீண் விரயமாகும் காரணம் |
|---|---|
| மாம்பழம் | போக்குவரத்தின்போது தகர்ந்து பழுதடைதல் |
| வெண்டிக்காய் | பதத்திற்கு மேல் முற்றுதலால் |
| மீன் | உள் மாற்றங்களால் பழுதடைதல் |
| உணவுப் பொருள் | வீண் விரயமாவதைத் தடுப்பதற்குரிய ஆலோசனைகள் |
| 35. மாம்பழம் | |
| 36. வெண்டிக்காய் | |
| 37. மீன் | |

☆ எமது சூழலிலுள்ள சில பிராணிகள் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட மாணவன் ஒருவன் தயாரித்த அட்டவணை வருமாறு: இங்கு ஒவ்வொரு பிராணிக்கும் பொருந்தும் இயல்பின் கீழ் X எனும் அடையாளத்தை இடுக. ஊதாரணமாக ஒன்று செய்து காட்டப்பட்டுள்ளது.

| | பிராணியின் பெயர் | உடலின் தன்மை | | | | உணவு வகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஈரலிப்பான தோல் | இறகு உடையவை | செதில்/ஓடு கொண்டவை | சாதாரண தோல் | தாவர உணவு | மாமிச உணவு | அனைத்தும் உண்பவை |
| | காகம் | | X | | | | | X |
| 38. | பாம்பு | | | | | | | |
| 39. | முயல் | | | | | | | |
| 40. | தவளை | | | | | | | |
| 41. | கழுகு | | | | | | | |
| 42. | நத்தை | | | | | | | |

கீழ்வரும் சொற்கூட்டங்களினது கருத்தைத்தரும் தனிச் சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

43. மா, பலா, வாழை என்பன ..........................................

44. தன்னைப் பற்றித்தானே எழுதும் சரிதை ..........................................

45. எழுபத்தி ஐந்தாவது ஆண்டு நிறைவிலே கொண்டாடப்படுவது ..........................................

46. யாவருக்கும் இல்லை என்னாது வழங்குபவர்..........................................

47. நீர், நிலம், நெருப்பு, வானம், காற்று ..........................................

48. முனிவர்கள் வசிக்கும் இடம் ..........................................

49. ஒரே பாடசாலையில் ஒரே வகுப்பில் ஒன்றாகப் படித்தவன் ..........................................

50. மணலும் மணல் சார்ந்த இடமும் ..........................................

**கீழே உள்ள கூட்டினுள் தரப்பட்டுள்ளவற்றைக் கொண்டு விடை எழுதுக.**

விகடம், கணக்கு வழக்கு, நெறு நெறு, பெரிய பெரிய, சோவென காசினி,
கந்தையானாலும் கசக்கிக் கட்டு, பால்போல நிலவு, கண்ணன் வந்தான்.

51. அடுக்குத் தொடர் ஒன்று ..........................................

52. இணை மொழி ஒன்று ..........................................

53. இரட்டைக் கிளவி ஒன்று ..........................................


54. பழமொழி ஒன்று ..........................................

55. உவமைத் தொடர் ஒன்று ..........................................

56. “வேடிக்கை” என்பதன் ஒத்த சொல் ..........................................

57. பூமி என்பதன் ஒத்த சொல் ..........................................

# புதுமையான சிகை அலங்காரம்



சிகை அலங்காரம் செய்வதில் என்ன புதுமை என்று யோசிக் கிறீர்களா? இங்கு ஒருவர் நெருப்பை வைத்து சிகை அலங்காரம் செய்கிறார். இப்படி அலங்காரம் செய்வதால் ஆரோக்கியமான முடி வளரும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# ஆமை முதுகுடன் சிறுவன்



உலகெங்கும் பரந்து வாழும் பல்வேறு விசித்திர மனிதர்கள் பற்றிய ஏராளமான செய்திகளை நீங்கள் படித்திருப்பீர்கள். இது போன்ற விசித்திரமான ஒரு மனிதன் பற்றிய செய்தியே இதுவும். பொதுவாக விசித்திரங்களுக்கு சீனா பின் நிற்பதில்லை. சீனாவைச்சேர்ந்த மைமதி ஹலி என்ற நபர் வித்தியா சமான உடல் நோயினால் பாதிக்கப் பட்டுள்ளார். தனது முதுகுப் பகுதியில் ஆமையின் முதுகைப்போன்று காணப்படுகிறது. நான்கு வருடங்கள் இந்நோயினால் அவதிப்படும் இவர் அறுவைச்சிகிச்சைக்காக மருத்துவர் களின் உதவியை தற்போது நாடியுள்ளார்.

இவருக்கு முதுகுப்புறம் இருக்கும் மேடு போன்ற அமைப்பை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்ற மருத்துவர் கள் முடிவு செய்துள்ளனர். இதற்கு இரண்டு மணிநேரம் ஆகுமெனவும் கூறியுள்ளனர். குறித்த நபருக்கு இந்த எந்தவிதமான வலிகளும் இல்லாத போதும் முதுகு மேடு தன்னைப் பார்ப்பவர்கள் ஆமை ஆமை எனக் கிண்டல் அடிப்பதாகக் குறிப்பிடு கிறார். எனினும் நாளுக்கு நாள் இவரின் முதுகில் இருக்கும் மேடு வளர்ந்து கொண்டு போகின்றதாம்.

# இதுவும் உலக சாதனை






பிரிட்டனின் வேல்ஸ் மாநில தென் பகுதியில் ஒரு புதிய உலக சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது. இதுவொன்றும் பெரிய கஷ்டமான விடயமல்ல. ஒரே நேரத்தில் 400பேர் முழு நிர்வாணத்துடன் கடலுக்குள் இறங்கியதுதான் இந்தப்புதிய உலகசாதனை. வேல்ஸ் மாநில விண்டி வெல்ஷ் கடற்கரையில் தான் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்த நிர்வாண கடல் குளியலில் பங்கேற்க உலகம் முழுவதும் இருந்து மக்கள் வந்திருந்தனர். காலை எட்டு மணிக்கு முன்பே கடற்கரைக்கு வந்து சேர்ந்த அவர்கள் மளமளவென்று ஆடைகளைக்களைந்துவிட்டு கடலில் இறங்கினர். காலநிலை குளிராக இருந்தது. காற்றும் வீசிக் கொண்டு இருந்தது. கடல் நீரும் கடும் குளிர் நீராகவே இருந்தது. இருப்பினும் அவை எவற்றையும் இந்த சாதனையாளர்கள் பொருட்படுத்தவில்லை. குளிர்ந் கடல் நீருக்குள் இறங்கியதும் அவர்கள் எழுப்பிய ஓசை தாங்க முடியவில்லை. வயது வித்தியாசம் பால் வித்தியாசம் எதுவுமின்றி ஒரு வேடிக்கைக்காகவே இந்தச் சாதனையை இவர்கள். ஏற்படுத்தியுள்ளனர்.

# இப்படியும் வீடியோ கேம்

மனிதன் எப்போதும் புதுமை விரும்பி. குறிப்பாக ஆண்கள் வித்தியா சமான அனுபவங்கள்மீது எந்நேர மும் பெருவிருப்பம், அதீத நாட்டமும் கொண்டவர் கள். இந்நிலையில் ஆண்களுக்காக மிகவும் வித்தியாசமான வீடியோ கேம் ஒன்றை சகல வசதிகளுடன் கண்டுபிடித்துத் தந்துள்ளது ஜப்பானின் சேகா நிறு வனம். ஆண்கள் இவ்விளையாட்டை கழிவறையில் சிறுநீர் கழிக்கின்றபோது விளையாட முடியும். கைகளால் விளையாடுகின்ற விளையாட்டு அல்ல.

சிறுநீர் கழிப்பில்தான் விளையாட்டு தங்கயுள்ளது. வீடியோ கேம் கழிவறையில் இணைக்கப்பட்டு இருக்கும். சிறுநீர் கழிக்கப்படுகின்றபோது இயங்கத் தொடங்கும். விளையாட்டின் வெற்றி சிறுநீர் கழிக்கப்படுகின்ற வேகத்தில் தங்கியுள்ளது. இவ்விநோத விளையாட்டு ஜப்பானிய ஆண்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளது. ஜப்பானிய வீடுகளில் உள்ள மலசலகூடங்களுக்கு இவ்வீடியோ கேம் வசதிகள் இவ்வருட இறுதியில் செய்து கொடுக்கப்படும் என சேகா நிறுவனம் அறிவித்துள்ளது.




# விஞ்ஞானத் தகவல்களுக்கு

தேடலுக்கான தளம் என்றால் நம் நினைவில் முதலில் நிற்பது கூகுள் தேடுதளம் மட்டுமே. ஆனால் அறிவியல் தகவல்கள் தேடுவதற்கு மட்டும் என ஓர் தளம், கூகுள் தேடல் தளத்தைக்காட்டிலும் முன்னணி இடம் பெற்று இயங்குகிறது. இதன் பெயர் சைரஸ். இந்தத் தேடுதல் தளம் கொண் டுள்ள முகப்புப்பக்கத்தில் ஏறத்தாழ 41கோடி தளங்கள் உள் ளன. தேடும் போது முக்கிய சொல், தலைப்பு அல்லது அறிவியல் கலைச்சொல் என ஏதேனும் ஒன்றைத் தரலாம். அந்தத் தலைப்பு அல்லது சொல் குறித்த தளங்கள் மட்டுமின்றி பல முக்கிய கட்டுரைகளையும் இந்தத் தளம் சுட்டிக்காட்டுகிறது. இதனுடைய ஒரு சிறப் பம்சம் என்னவெனில் அறிவியல் அல் லாத மற்றத் தளங்களை இந்த தேடல் தளமே ஒதுக்கிவிடுகிறது. எனவே தொடர்பு இல்லாத மற்ற தளங்களின் லிங்க் மீது கிளிக் செய்து அவற்றைத் தேவையின்றி இறக்கி நேரத்தை வீணடிக்கும் வேலை இங்கு எழாது. இந்தத் தளம் சுட்டிக்காட்டும் தளங்கள் அனைத்தும் அறிவியல் சார்ந்த, தொழில் நுட்பம் அல்லது மருத்துவம் சார்ந்த தகவல்கள் உள்ள தளங்களாக இருக்கும். அண்மைக்காலத்தில் அந்த அறிவியல் பிரிவில் வெளியான அறிக்கைகள், வல்லுநர்களின் கட்டுரைகள், காப்புரிமை பெற்ற தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள், ஆய்வுக்கட்டுரைகளைத் தாங்கி வரும் ஆய்வு இதழ்கள் ஆகியவற்றைக்காட்டும் இணையத் தளங்களுக்கான தொடர்புகளாக இருக்கும். ஆய்வு மேற்கொள்பவர்கள் மற்றும் விஞ்ஞானிக ளுக்கான தனிப்பட்ட தகவல்களைக்காட்டும் தளங்களாக இருக்கும். தொடர்ந்து பல ஆண்டுகளாக அறிவியல் தேடல்களுக்கான இணைய தளத்திற்கான விருதை இந்தத்தளம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தத்தளத்தின் மூலம் குறிப்பிட்ட பொருள் குறித்த தேடல் மட்டுமின்றி கட்டுரை எழுதியோர், கட்டுரைத் தலைப்பு, அதனை வெளி யிட்ட ஆய்வு இதழ் ஆகியவற்றின் அடிப்படையிலும் தேடலாம். நாட்கள் அடிப்படையிலும் தேடலை மேற்கொள்ளலாம்.

கணினி மூலை

இணையதள முகவரி:- http://www.scirus.com/

# பாம்புகளின் ஆலயம்



பாம்புகளுக்கு பல ஆலயங்கள் இருந்தாலும் உயிருடன் பாம்புகளை வைத்து வழிபடும் ஆலயம் மலேசியாவில் உள்ளது. இந்த ஆலயத்தில் உள்ள பாம்புகள் அனைத்தும் சுற்றியுள்ள காட்டுப்பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டு வளர்க்கப்படுகிறது.



# 15இல் திறக்கப்படுகிறது சாயிபாபாவின் சமாதி

(நகரி)

உடல்நலக்குறைவு காரணமாக மரண மடைந்த சாயிபாபாவிற்கு கட்டப்பட்டு வரும் சமாதி அடுத்தமாதம் 15ஆம் திகதி திறக்கப்படவுள்ளது. அவர் ஆசிரமத்தில் பக்தர்களுக்கு ஆசி வழங்கி வந்த குல் வந்த் ஹோலில் சமாதி கட்ட அறக்கட் டளை நிர்வாகிகள் முடிவு செய்திருந்த னர். இதன்படி அங்கு ராஜஸ்தான் கிர னைட்,பளிங்குக் கற்கள் கொண்டு சமாதி கட்டப்பட்டு வருகிறது. அதில் சாய்பாபா நின்றபடி பக்தர்களுக்கு ஆசி வழங்கு வது போன்ற பளிங்குச் சிலை அமைக்கப் படுகிறது.

சமாதியை 30 கிலோ தங்கத்தால் அலங்கரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் தற்போது வேகமாக நடந்து வருகிறது. சமாதி அமைக்கும் பணியில் மும்பை, பெங்களூர், ஜப்பான



என்ஜினியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சாய்பாபா அறக்கட்டளை நிர்வாகி ஒருவர் கூறும் போது, சாய்பாபா சமாதி கலையத்துடன் கட்டப்படுகிறது. இப் பணி அடுத்த மாதம் முதல் வாரத்தில் முடிந்து விடும். இதனால் திட்டமிட்டபடி அடுத்த மாதம் 15ஆம் திகதி சாய்பாபா சமாதி திறக்கப்படும் என்றார்.

# 23 தமிழக மீனவர்கள் கைது




(ராமேஸ்வரம்)

மண்டபம், ராமேஸ்வரம் பகுதிகளில் இருந்து மீன்பிடிப்பதற்காகச் சென்ற 23 தமிழக மீனவர்களை இலங்கை கடற் படையினர் கைது செய்துள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து மீன்வளத்துறை உதவி இயக்குநர் மார்க்கண்டேயன் கூறு கையில், கைது செய்ததற்கான காரணம் தெரியவில்லை என்றும், நேற்று முன்தினம் நள்ளிரவு 11 மணியளவில் இந்தக் கைது சம்பவம் நிகழ்ந்துள்ள தாகவும் தெரிவித்தார். தமிழக மீனவர் களிடம் இருந்து 5 படகுகளையும் இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்துள்ள னர்.

இலங்கை கடற்படையினரிடம் இருந்து ஒரு படகில் தப்பி வந்த மீனவர் ஒருவர் தகவல் தெரிவித்ததையடுத்து இந்தக் கைது சம்பவம் அனைவருக்கும் தெரிய வந்தது.

பறிமுதல் செய்யப்பட்ட 5 படகுகள் மன்னார் கடற்படை முகாமில் வைக்கப் பட்டுள்ளது.

## சேலத்தில் நில அதிர்வு

(சேலம்)

சேலம் மாவட்டம் பன மரத்துப்பட்டி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதி களான திப்பம்பட்டி, குள்ளப்பநாயக் கனூர், குரால்நத்தம், கூட்டாறு, தும்பல் பட்டி, கம்மாளப்பட்டி, சாமகுட்டப்பட்டி, ஜல்லூத்துப்பட்டி உள்ளிட்ட கிராமங் களில் நேற்று அதிகாலை 5.21 மணியள வில் திடீரென நிலஅதிர்வு ஏற்பட்டது.

அதிகாலை நேரம் என்பதால் வீட்டில் தூங்கி கொண்டு இருந்தவர்கள் திடீ ரென நில அதிர்வை உணர்ந்து வீட்டை விட்டு ஓட்டம் பிடித்து வெளியே ஓடிவந் தனர். அனைவரும் வீட்டை விட்டு ஓடி வந்து தெருக்களில் தஞ்சம் அடைந்தனர்.

## திரைப்படமாகின்றது சாயிபாபாவின் வாழ்க்கை

(ஆனந்தப்பூர்)

சத்யசாயிபாபாவின் வாழ்க்கை வர லாற்றை திரைப்படமாக தயாரிக்க போவதாக சினிமா டைரக்டர் கோடி ராமகிருஷ்ணா தெரிவித்துள்ளார். பிர பல சினிமாத் தயாரிப்பாளரும், முன் னாள் காங்கிரஸ் எம்.பியுமான ஹரிராம ஜோகையா மற்றும் ஜோனவிதுலா ராம லிங்கேஸ்வரா ராவ் ஆகியோர் புட்ட பர்த்தி நகருக்கு வருகை தந்தனர். படம் எடுப்பது குறித்து கோடி ராம கிருஷ்ணா கூறியதாவது: சத்யசாய் பாபாவின் படம் சர்வதேச தரத்தில் தயாரிக்கப்படும் என்றும், இந்திய மொழிகளில் 'பெரும்பான்மை மொழி களில் தயாரித்து வெளியிடப்படும் என் றும் கூறினார்.

# இலங்கைத்தமிழர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வைக் காணவேண்டும்

## - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து



(புதுடில்லி)

இலங்கைத்தமிழர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வைக் காண்பதற்குரிய நட வடிக்கையை எடுக்கக் கோரி பிரதமர் மன்மோகனை சந்தித்து வலியுறுத்த வுள்ளதாக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யின் தேசியச் செயலாளர் டி.ராஜா தெரி வித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசி யச் செயலாளரான டி.ராஜா டில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை நேற்று முன்தினம் சந்தித் துப் பேசினார். இந்தச் சந்திப்பு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய டி.ராஜா,

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணக் கோரி ஜூலை 8ஆம் திகதி அகில இந்திய அளவில் இலங்கைத் தமிழர் கருத்தொற்றுமை நாளாக இந்திய கம்யூனிஸ்ட் கடைப் பிடிக்க உள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண நடவடிக்கை எடுக் கும்படி இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக் குழு பிரதமர் மன்மோகன் சிங்கை விரைவில் சந்தித்து வலியுறுத்தும். இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரில் இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக போர்க் குற்றம் புரிந்துள்ளது என்பதை ஐக்கிய நாடுகள் சபை அமைத்த குழு அளித்த அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு உண்டு. தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ வுடன் இந்திய அரசு பேச்சு நடத்த வேண் டும். தமிழர்களுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்க இலங்கை ஜனாதிபதியை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். தமிழர் களின் நலன் கருதி இந்த நடவடிக் கையை மத்திய அரசு விரைந்து எடுக்க வேண்டும்.

குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்து இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இந்தியாவில் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் அகதிகள் முகாமில் வசிக்கிறார்கள்.

எனவே இது இந்தியாவுக்கு முக்கிய மானப் பிரச்சினையாகும். இப்பிரச்சி னைக்கு விரைந்து தீர்வு காணக் கோரி ஜூலை 8 ஆம் திகதியை அகில இந்திய அளவில் இலங்கைத் தமிழர் கருத்தொற் றுமை நாளாக இந்திய கம்யூனிஸ்ட் கடைப்பிடிக்க உள்ளது என்றார்.

# முதல்வர் ஜெயலலிதா மீதான அவதூறு வழக்குகள் வாபஸ்




(சென்னை)

கடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்த லின் போது அ.தி.மு.க. பொதுச் செய லாளர் ஜெயலலிதா மீது தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அவதூறு வழக்குகள் வாபஸ் பெறப் பட்டன.

முன்னாள் தமிழக முதல்வர் கரு ணாநிதி மற்றும் மத்திய, மாநில அரசு அதிகாரிகளை அவதூறு செய்யும் விதத் தில் ஜெயலலிதா அறிக்கை வெளியிட் டதாகக் கூறி, அவருக்கு எதிராக கடந்த ஏப்ரல் மாதம் சென்னை மாநகர அரசு குற்றவியல் வழக்கறிஞர் வழக் குத் தொடர்ந்தார்.

வன்முறையைப் பயன்படுத்தி கள்ள வாக்குப் போட மத்திய, மாநில அரசு அதிகாரிகளே துணை போவது கண் டிக்கத்தக்கது என்று ஜெயலலிதா அறிக்கையில் குறிப்பிட்டதாகக் கூறி இந்த வழக்கு தொடரப்பட்டது.

இதேபோல், தேர்தல் பாதுகாப் புப் பணியில் ஈடுபடும் காவலர்களுக் கான தினப்படியை, முதல்வர் கரு ணாநிதி குறைக்கச் சொன்னதாக ஜெயலலிதா கூறியதாகவும், இதுவும் ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்றும் கூறி மற்றொரு அவதூறு வழக்கும் தொடரப் பட்டது.

இந்நிலையில், தேர்தலில் அ.தி. மு.க. வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஜெயலலிதா, முதல்வராகப் பொறுப் பேற்றார்.

இந்த சூழலில், தேர்தல் நேரத்தில் ஜெயலலிதா மீது தமிழக அரசு சார் பில் தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்குகள் நேற்று முன்தினம் வாபஸ் பெறப்பட்டன. இதற்கான மனுவை, தற்போதைய சென்னை மாநகர அரசு குற்றவியல் வழக்கறிஞர் சென்னை முதன்மை செசன்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

நீதிபதி பி. தேவதாஸ் முன்னி லையில் மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. அப் போது, வழக்குகளை வாபஸ் பெற நீதிபதி அனுமதி அளித்தார். மேலும், இந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து ஜெய லலிதா விடுவிக்கப்படுவதாகவும் நீதி பதி தெரிவித்தார்.

# தொப்புள் கொடியிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகளுக்கு விதிக்கப்பட்ட தடைநீக்கம்

(புதுடில்லி)

மனித தொப்புள் கொடியிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகளை உற்பத்தி செய்ய,விற்பனை செய்ய,பயன்படுத்த விதிக்கப்பட்டிருந்த தடையை மத்திய அரசு தளர்த்தியுள்ளது.

தொப்புள் கொடியிலிருந்து உற்பத்தி செய்யப்படும் எச்.பி.இ. (பிளாசென்ட் ரக்ஸ்) வகை மருந்துகள் புண்களை ஆற் றுவதற்கும், கருப்பை சார்ந்த நோய் களைத் தீர்ப்பதற்கும் பயன்பட்டு வந்தது. இந்த மருந்துகளை கொல்கத்தாவைச் சேர்ந்த அல்போர்ட் டேவிட் லிமிடெட் நிறுவனம் தயாரித்து விற்பனை செய்து வந்தது. இந்த மருந்துகளுக்கு கடந்த பெப்ரவரியில் மத்திய அரசு தடை விதித்தது.

இதை எதிர்த்து அல்போர்ட் டேவிட் லிமிடெட் நிறுவனம் டில்லி உயர் நீதிமன் றத்தில் வழக்கு தொடர்ந்தது. இதன் பேரில், மருந்தின் நோய் தீர்க்கும் திறன், பயன்படுத்துவோருக்கு பாதுகாப்பு குறித்து விரிவாக ஆராய குழு ஒன்றை அமைக்க நீதிமன்றத்தில் மத்திய அரசு ஒப்புக் கொண்டது.

ஒன்பது பேர் கொண்ட மருத்துவ நிபுணர் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், எச்.பி.இ. வகை மருந்து களைத் தொடர்ந்து உற்பத்தி செய்து, விற்பனை செய்ய அனுமதி அளிக்கும் வகையில் தடையைத் தளர்த்துமாறு மத் திய அரசுக்கு டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## டில்லி சென்றார் கருணாநிதி

(சென்னை)


2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் தனது மகள் கனிமொழியின் பிணை மனுவை உச்சநீதிமன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்து அவரைச் சந்திப்பதற்காக தி.மு.க தலைவர் கருணாநிதி நேற்று டில்லி சென்றார்.

தி.மு.க மூத்த தலைவர்கள் துரை முருகன், பொன்முடி உள்ளிட்டோருடன் அவர் தனியார் விமானத்தில் நேற்று காலை. 8.50 மணியளவில் டில்லி புறப் பட்டுச் சென்றார்.

திகார் சிறையில் கனிமொழியை நேற்று சந்தித்த கருணாநிதி, டில்லியில் ஓரிரு நாட்கள் தங்கியிருப்பார் என்று தி.மு.க வட்டாரங்கள் தெரிவித்தன

# இந்தியாவுடனான பிரச்சினைக்கு போர் மூலம் தீர்வுகாண முடியாது

## பாகிஸ்தான் பிரதமர் தெரிவிப்பு




(இஸ்லாமாபாத்)
இந்தியாவுடனான அனைத்து பிரச்சினைகளுக்கும், பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். எந்த ஒரு பிரச்சினைக்கும் போரால் தீர்வுகாண முடியாது என பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி கூறினார்.

பாகிஸ்தானின், பஞ்சாப் மாகாணத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி மேலும் பேசியதாவது-

இந்தியா உள்ளிட்ட அனைத்து அண்டை நாடுகளுடனும், நட்புடன் இருக்க வேண்டும் என்றே பாகிஸ்தான் விரும்புகிறது. இந்தியாவுடனான அனைத்து பிரச்சினைகளுக்கும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். இதில், காஷ்மீர் பிரச்சினையும் அடககம். பிரதமர் மன்மோகன் சிங்கை, பல முறை சந்தித்துள்ளேன்.

அனைத்து பிரச்சினைகளையும், பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கலாம் என, அவரிடம் வலியுறுத்தியுள்ளேன். காஷ்மீர் பிரச்னைக்கு முழுமையான தீர்வு காண வேண்டும். இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், இன்னும் சில நாட்களில் பாகிஸ்தான் வரவுள்ளார்.

பாகிஸ் தான் வெளியுறவுச் செயலர் சல்மான் பசீருடன், முக்கிய விவகாரங்கள் குறித்து அவர் பேச்சு நடத்துவார். காஷ்மீர் பிரச்சினைக்கு, காஷ்மீர் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப, தீர்வு காண வேண்டும் என, சர்வதேச சமுதாயத்திடம், பாகிஸ்தான் வலியுறுத்தும். பாகிஸ்தானிலுள்ள காஷ்மீரில், விரைவில் சட்டசபைத் தேர்தல் நடக்கவுள்ளது. இந்தத் தேர்தல் அமைதியாகவும், நேர்மையாகவும் நடக்கும். இதன் மூலம், சர்வதேச சமுதாயத்தின் நன்மதிப்பு பாகிஸ்தானுக்கு கிடைக்கும். இவ்வாறு கிலானி கூறினார்.

# ரஷ்யாவில் பயணிகள் விமானம் விபத்து 44 பேர் உயிரிழப்பு, எட்டுப் பேர் காயம்



(மொஸ்கோ)
ரஷ்யாவில் பயணிகள் விமானமென்று விழுந்து விபத்துக்குள்ளானதில் விமானத்தில் பயணம் செய்தவர்களில் 44 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மேலும் எட்டுப்பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர். ரஷ்யாவின் டியூப்லோவ் - 134 ரக பயணிகள் விமானம் மொஸ்கோ டொமோதெதோவோ விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு பெட்ரோஷாவோட்ஸ்க் நகருக்கு வந்தது. அதில் 52 பயணிகள் இருந்தனர். அவர்களில் 9 பேர் விமான ஊழியர்கள்.

விமானத்தை பெட்ரோஷாவோட்ஸ்கில் உள்ள பேசோவெட்ஸ் விமான நிலையத்தில் தரை இறக்க விமானி முயற்சித்தார். அப்போது அங்கு கடுமையான மூடுபனி இருந்தது.

இந்நிலையில், 1 கி.மீற்றர் தூரத்துக்கு அப்பால் இந்த விமானம் நெடுஞ்சாலையில் விழுந்து நொறுங்கியது. இதனால் விமானம் தீப்பிடித்து எரிந்தது. கரும்புகையுடன் நெருப்பு பந்து போன்று எரிந்தது.

பெட்ரோஷா வோட்ஸ்க் விமான நிலையத்துக்கு தகவல் கொடுக்கப்பட்டது. உடனே மீட்பு குழுவினர் அங்கு விரைந்து வந்தனர். அதற்குள் 44 பேர் தீயில் கருகி பரிதாபமாக இறந்தனர். ஆண்டன் என்ற 10 வயது சிறுவன் உள்பட 8 பேர் காயத்துடன் மீட்கப்பட்டனர். அவர்களில் 7 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது

## உலகச் செய்திகள்

# அணுமின் நிலையங்களின் பாதுகாப்பு

## ஈரானில் ஆரம்பமானது 5 நாள் கூட்டம்

(தெஹ்ரான்)
அணுமின் உற்பத்தி மற்றும் பாதுகாப்பு குறித்துப் பேச, உலகளவில் 150 நாட்டு பிரதிநிதிகள் கலந்து கொண்ட சர்வதேச அணுசக்தி முகவரமைப்பின் (ஐ.ஏ.இ.ஏ.) ஐந்து நாள் கூட்டம் நேற்றுமுன்தினம் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் தொடங்கியது.

ஜப்பானில் மார்ச் 11 ஆம் திகதி சுனாமி தாக்கியதில், அந்நாட்டின் புக்குஷிமா அணுமின் உலை வெடித்து, அதில் இருந்து கதிர்வீச்சு வெளிப்பட்டு ஆபத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து, உலக நாடுகள் அனைத்தும் அணுமின் உற்பத்தியின் அவசியம் குறித்து பரிசீலிக்கத் தொடங்கியுள்ளன.

ஜேர்மனியில் உள்ள அனைத்து அணுமின் உற்பத்தி நிலையங்களையும் 2022 இல், இழுத்து மூட, அந்நாட்டு அரசு முடிவு செய்தது. இத்தாலியில் அணுமின் நிலையங்களைப் புதுப்பிக்க, அந்நாட்டு நாடாளுமன்றம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் ஏற்படும் இயற்கை சீற்றங்களின் போது, அணுமின் நிலையங்களைப் பாதுகாப்பது தொடர்பாக, இந்தியா உட்பட பெரும்பாலான நாடுகள் ஆலோசித்து வருகின்ற இந்நிலையில், ஜப்பானில் சுனாமியால் ஏற்பட்ட அணுமின் உலை வெடிப்பு குறித்தும், எதிர்காலத்தில் உலகளவில் உள்ள அணுமின் நிலையங்களின் பாதுகாப்புக் குறித்து பேசவும், சர்வதேச அணுசக்தி ஏஜன்சியின் ஐந்து நாள் கூட்டம், நேற்றுமுன்தினம் ஈரான் தலைநகர் தெஹ்ரானில் தொங்கியது. இக்கூட்டத்தில், 150 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதில், குறிப்பாக ஜப்பானில் புக்குஷிமா அணுமின் உலை வெடிப்பு மற்றும் கதிர் வீச்சு குறித்து பேசப்பட்டது. இந்த அணு உலை வெடிப்பு தொடர்பான அறிக்கையும், ஐந்து நாட்கள் நடைபெறும் தொடர் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பதிவிறக்கப் பெட்டகம்

தான் ஏத்துக்கிட்ட கருத்துக்கு விசுவாசமா நடக்கிறதோட யாரும் திருப்தியடையறதில்லை. தன்னால முடிஞ்சமட்டிலும் அந்தக் கருத்தை மத்தவங்களிடம் பிரசாரம் செய்கிறவங்களாகவும் ஒவ்வொருத்தரும் இருக்கிறோம். தனிமனுசனாகவோ ஒரு குழுவாகவோ ஒரு இனமாகவோ வர்க்கமாகவோ பிரிந்தும் சேர்ந்தும் இந்தப் பிரசாரம் நடக்குது. இந்த பிரசாரத்திற்கான கருவிகளில் ஒன்றுதான் ஊடகங்கள். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இன்டர்நெட், சினிமா, மேடை, கலை இலக்கியம் என்று ஊடகங்களோட வகைமைகள்னு விரித்துச் சொல்லலாம். ஏதோவொரு கருத்துக்கு ஒட்டுமொத்த சமூகத்தையும் ஒப்புக்கொள்ள வைக்கிறதுதான் இவையெல்லாத்துக்கும் நோக்கம். இந்த ஊடகங்கள் மக்களோட தொடர்பு வச்சிருக்கிறதே ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில தனக்கிருக்கிற கருத்தை சமூகத்தோட பொதுக்கருத்தா மாற்றணும்கிறதுக்காகத் தான்.

*- ஆதவன் தீட்சண்யா.*

மீடியா மதத்திற்குப் பதிலீடாக உருவாகி வருகிறது. நவீன மனிதனுக்கு அவனுக்கு "அப்பாலான" நடப்புகள் பற்றிய செய்திகளைத் தொடர்ந்து அளிப்பதன் மூலம் ஒருவிதப் பாதுகாப்பு உணர்வை மீடியா ஏற்படுத்துகிறது. அன்றாட உழலுதலின் அற்பத்தனத்திலிருந்து மனிதனை விடுவித்துப் "பேருண்மை" யுடன் தொடர்புகொண்டுள்ள மாயையை மீடியா ஏற்படுத்துகிறது. மீடியா மதத்தைப் பதிலீடு செய்வதால்தான் அது மரணத்தைப் பற்றி பெரும் கரிசனம் கொள்கிறது. கொலை, படுகொலை, விபத்து, பேரழிவு, போர் என மரணத்தின் எல்லாப் பரிமாணங்களையும் மதத்தைப் போலவே மீடியாவும் பிரதானப்படுத்துகிறது.

*- ஜோன் கரே.*

செப். 11 தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவில் பெரும் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது. பங்குச் சந்தையில் எல்லாப் பங்குகளின் விலைகளும் சரிந்தன. ஆயுதம் தயாரிக்கும் கம்பனிகளின் பங்குகளும் மீடியா கம்பனிகளின் பங்குகளும் மட்டும் உயர்ந்தன. சமூகத்தின் கேடுகாலம் மீடியாவின் பொற்காலம். அதேபோல சமூகத்தில் சிவில் யுத்தம், போர், மதக் கலவரம், சாதிக் கலவரம் போன்றவை இல்லாத சுபிட்சமான நிலை நிலவுமெனில் மீடியா பெரும் சரிவைச் சந்திக்கும். இலங்கையில் அமைதி உடன்படிக்கைக்குப் பிறகு நாளிதழ், இதழியல் விற்பனை கடுமையான சரிவைக் கண்டுள்ளது. இதற்கு ஒரு நல்ல உதாரணம். அங்கு அமைதி நீடிப்பதில் மீடியாவின் பங்கு என்னவாக இருக்கும் என்பதை ஊகிக்கக் கற்பனை வளம் அவசியமில்லை.

*- காலச்சுவடு கண்ணன்.*

ஒருவர் மக்களுடைய ஏதேனும் ஒரு எரியும் பிரச்சினையை வார்த்தைகளாக மாற்றிவிட்டால் அதன் மூலம் அந்தப் பிரச்சினைக்கோ அந்த மக்களுக்கோ என்ன நடக்கிறது என்று யாரும் யோசிப்பதாகத் தெரியவில்லை. உதாரணமாக ஈழத்துப் பிரச்சினையைப் பற்றித் தொடர்ந்து ஓவியம் வரையும் ஓர் ஓவியரின் முகத்தில் சுடர்விடும் தியாகத்தின் புனிதக் களைப்பை என்னால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடிந்ததில்லை.

*- மனுஷ்ய புத்திரன்.*

தமிழில் வெளிவருகின்ற புத்தகங்களெல்லாம், அவை வாசிக்கப்பட வேண்டும் என்ற நோக்கம் மட்டுமே கொண்டிருப்பதாக நினைக்க வேண்டியதில்லை. சிலருக்கு, குலதெய்வத்திற்கு மொட்டை போடுவதும், காவல் தெய்வத்திற்கு தீச்சட்டி எடுப்பதும் போலத்தான் எழுதிய நூலை வெளியிட்டு விழா வைப்பதும் ஒரு சடங்கு சார்ந்த நிகழ்ச்சி. இன்னும் சிலருக்கு பணி உயர்வுக்கு உதவும் கூடுதல் சான்றிதழ். வேறு சிலருக்கு வாரிசுகள் தொழில்கல்வி பெற உதவும் கூடுதல் மதிப்பெண்கள் இதுபோன்ற பல காரணங்களாலும் தமிழன்னை அணிகலன்கள் பல பூண்டு ஆனந்த நர்த்தனம் புரிய வழியேற்படுகிறது.

*- அ.ராமசாமி.*

கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் என்பது நாம் ஆதரிக்கும் கருத்துக்களுக்கான சுதந்திரம் மட்டுமல்ல. நம்மை அதிர்ச்சி அடையச் செய்யும் கருத்துக்களுக்கான சுதந்திரமும் கூட.

*- நோம் சோம்ஸ்கி.*

பத்திரிகைச் சுதந்திரத்தை விடப் பத்திரிகைகளிடமிருந்து சுதந்திரம்தான் இன்று மக்களுக்குத் தேவையாக இருக்கிறது.

*- ஒஸ்வோல்ட் ஸ்பெங்லர்.*

எனது சுதந்திரம்
அரசாலோ தனிநபராலோ
பறிக்கப்படுமெனில்
அது என் சுதந்திரம் இல்லை
அவர்களின் சுதந்திரம்தான்.

*- ஆத்மாநாம்.*

# இராணுவத்திலுள்ள தமிழ்மக்களுக்கு எதிரான குழுவே கூட்டமைப்பினர் மீதான தாக்குதலை நடத்தியது

## அமைச்சர் வாசுதேவ கூறுகிறார்



(கொழும்பு)

**இராணுவத்திற்குள் உள்ள தமிழ் மக்களுக்கு எதிரான கடும் போக்குடைய இரகசிய குழுவினரே யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியிலுள்ளனர். தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஒரு சில குழுக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன என்று தேசிய மொழிகள் மற்றும் இன நல்லுறவு அமைச்சரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

பிரபாகரனின் தயார் இறந்த பின்னர் தகனக் கிரியைகள் இடம்பெற்ற இடத்தில் நாய்களை சுட்டுக் கொன்று வீசியவர்களும் இத்தகைய குழுவினரேயாவர் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

யாழ்ப்பாணத்தில் அளவெட்டியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அப்பிரதேசத்தில் உருவாகப் போகும் ஜனநாயகச் சூழலை இல்லாதொழிப்பதே இத் தாக்குதலின் நோக்கமாகும். இதன் மூலம் ஜனநாயக அரசியலை இல்லாதொழிப்பதும் அரசாங்கத்தை அசௌகரியத்துக்குள் தள்ளுவதுமே சூத்திரதாரிகளின் நோக்கமாகும்.

இராணுவத்தில் உள்ள பிடிவாதமுடைய தமிழ் மக்களுக்கு எதிரான இரகசியக் குழுவினரே இத்தாக்குதலின் பின்னணியில் இருக்கின்றனர். இக்குழுவினர் தான் பிரபாகரனின் தாயார் இறந்த பின்னர் தகனக் கிரியைகள் இடம்பெற்ற இடத்தில் நாய்களை துப்பாக்கியால் சுட்டுக் கொன்று அவ்விடத்தில் வீசியவர்களுமாவர்.

இக்குழு அரசியல் ரீதியாக செயற்படுவதோடு, தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதக் குழுவுமாகும். எனவே இராணுவத்தில் இயங்கும் இந்த இரகசியக் குழு தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி கண்டுபிடித்து களைய வேண்டும். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் மேலும் பயங்கரமான நடவடிக்கைகளை இக்குழு மேற்கொள்ளும் நிலைமை உருவாகும். இக்குழுவினரை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

இன்று ஜனாதிபதியின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன. அதனடிப்படையிலேயே அமெரிக்காவில் ஒரு பிராந்தியத்தில் மாவட்ட நீதிமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்குக் கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை. நாட்டின் பிராந்திய மாவட்ட நீதிமன்றத்திலேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வதேச நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. எனவே எதுவும் செல்லுபடியாகாது. எமது நாட்டுக்குள்ளேயே வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டாலும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கு அதனை இரத்து செய்யும் அதிகாரம் உண்டு. சனல் - 4 இல் ஒளிபரப்பாகிய எமது இராணுவத்தினர் தொடர்பான வீடியோ நாடாவை கோரியுள்ளோம். அது தொடர்பில் ஆராய்ந்து இராணுவத்தினர் குற்றங்கள் செய்திருப்பின் அதற்கெதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனவே வெறுமனே ஆதாரங்கள் இன்றி திரைப்படத்தை காண்பிப்பது போன்று தொலைக் காட்சியில் ஒளிபரப்பியதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

# ஊடகவியலாளருக்கு உதவி

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தம் வரை செய்தி சேகரிப்பில் ஈடுபட்டு சேவையாற்றி உயிரிழந்த, காணாமல் போன, மற்றும் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் உறவினர்களுக்கு கொழும்பில் இருந்து செயற்படும் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் நிதியுதவி வழங்கியுள்ளது.

சுவிட்ஸர்லாந்தில் உள்ள சிவராம் ஞாபகார்த்த மன்றத்தின் உதவியுடன் இந்த உதவி வழங்கப்பட்டது.

ஒன்றியத்தின் தலைவர் இ.பாரதி, உபதலைவர் அ.நிக்ஸன், ஒன்றிய உறுப்பினர் துஷ்யந்தி கனகசபாபதிப்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்ட 10 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாவை யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கினர்.

எதிர்காலத்தில் இவ்வாறான உதவிகளை தொடர்ந்து வழங்குவதற்கும் அவர்களுக்கு ஏற்ற தொழில்களை பெற்று கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஒன்றியத்தின் தலைவர் பாரதி தெரிவித்தார்.

யுத்தத்தினால் கிழக்கு மாகாணத்திலும் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு உதவிகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளர் செல்வராஜா ரஜிவர்மனின் தாயாருக்கு கொழும்பு விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் உதவியுடன் 20 ஆயிரம் ரூபாவை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கடந்த ஏப்ரல்மாதம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரயில்வே திணைக்களத்திற்கு சொந்தமான 16ஆயிரம் ஏக்கரில் சட்டவிரோத குடியேற்றம்

## வெளியேற்ற நடவடிக்கை என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)


நாடளாவிய ரீதியாக, இலங்கை ரயில்வே திணைக்களத்திற்கு சொந்தமான 16 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், சட்டவிரோத குடியேறிகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளை ரயில்வே திணைக்களம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ரயில்வே திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளில், சட்டவிரோதமாக கட்டடங்களை நிர்மாணித்து வசித்து வருபவர்களுக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கைகள் எடுக்க தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பண்டாரவளை பிரதேசத்திற்கு சென்றிருந்த அமைச்சர், ரயில்வே திணைக்களத்திற்கு சொந்தமான 7 ஏக்கர் நிலப்பரப்பில் பலர் சட்டவிரோதமாக குடியிருப்பது குறித்து ஆராய்ந்துள்ளார்.

சட்ட விரோத குடியேற்றவாசிகள் காரணமாக வருடாந்தம், ரயில் திணைக்களம் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.



இராணுவத்தினரும்,வீதிப் போக்குவரத்துச் சபையினரும் இணைந்து வட்டக்கச்சி பிரதான பாதையை மிகவும் துரித கதியில் புனரமைப்புச் செய்து வருகின்றமையைக் காணலாம் (77)

# 20 வருடங்களின் பின்னர் பள்ளிமுனை வீதி திறப்பு




(மன்னார்)

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த மன்னார், பள்ளிமுனை கடற்கரைப் பகுதியிலுள்ள பிரதான வீதி மக்களின் போக்குவரத்திற்காக நேற்றுமுன்தினம் காலை திறந்துவிடப்பட்டுள்ளது.

மன்னார் - பள்ளிமுனை கடற்கரைப்பகுதியிலுள்ள பிரதான வீதியை கடற்படையினர் 20 வருடங்களுக்கும் மேலாக மூடிவைத்துள்ள நிலையில், பொதுமக்கள் தொடர்ந்து அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்திருந்தனர். இந்த நிலையில் மேற்படி வீதியைத் திறந்துவிடுமாறு மன்னார் நகரசபை விடுத்த கோரிக்கையையடுத்து மேற்படி வீதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதியைத் திறந்து வைக்கும் வைபவத்தில் கடற்படை அதிகாரிகள் மற்றும் மன்னார் நகரசபையின் உறுப்பினர்களான இ.குமரேஸ் மற்றும் மெரினஸ் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வெளிநாடுகளில் வாழும் இலங்கையர் மெதுவாக நாடு திரும்புகின்றனர்

## என்கிறது யு.என்.எச்.சி.ஆர்.

(கொழும்பு)

யுத்த நிறைவின் பின்னர் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர் மெதுவாக நாடு திரும்பி வருவதாகக் யு.என்.எச்.சி.ஆர். தெரிவித்துள்ளது.

உலகப் புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் உதவியுடன் சுமார் 2900 இலங்கையர் நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் அதிகமானவர்கள் இந்தியாவின் தமிழகத்திலிருந்து நாடு திரும்பியுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக சுயமாகவே 2000 இலங்கையர் நாடு திரும்பியுள்ளனர். 2010ஆம் ஆண்டு புள்ளி விபரத்தரவுகளின் அடிப்படையில் 141063 இலங்கை அகதிகளும், 8563 புகலிடக் கோரிக்கையாளர்களும் வெளிநாடுகளில் தஞ்சமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெருமளவிலான இலங்கையர், இந்தியாவில் சரணாகதி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும், புகலிடக் கோரிக்கையாளர்களும் இலங்கையிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

ஒப்பீட்டளவில் மிகவும் குறைந்தளவான நபர்கள் இவ்வாறு இலங்கையில் தஞ்சமடைந்துள்ளனர் என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான இலங்கைப் பிரதிநிதி மைக்கல் சாவெக் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 236 பதிவு செய்யப்பட்ட அகதிகளும், 141 புகலிடக் கோரிக்கையாளர்களும் அடைக்கலம் புகுந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் வழங்கி வரும் ஆதரவு பாராட்டுக்குரியது என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

உலகம் முழுவதிலும் இடம்பெற்று வரும் வன்முறைகைள் காரணமாக 43 மில்லியன் அகதிகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு இலவச உணவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு இலவசமாக இரவு நேர உணவு வழங்கப்படவுள்ளது. இது சம்பந்தமான அறிவித்தல் கிராம அலுவலர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கடமையாற்றும் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட ஆண் அலுவலர்கள் ஆண் லிகிதர்மார்களும் வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கும் பெட்டிகளுடன் முதல் நாள் இரவு தங்கவேண்டியுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் இவர்கள் வாக்களிப்பு நிலையத்தில் தங்காது தமது வீடுகளுக்குச் சென்று விட்டு வாக்களிக்கும் நேரத்தில் வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இத்தகைய நடவடிக்கையை தேர்தல் அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழக மீனவர்களை உடன் விடுவிக்க இந்தியப் பிரதமரிடம் ஜெயலலிதா கோரிக்கை



(சென்னை)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழக மீனவர்களை விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கையில் பிரதமர் மன்மோகன்சிங் ஈடுபட வேண்டும் என்று தமிழக முதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.


இதுகுறித்து முதல்வர் ஜெயலலிதா இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் ஒன்றை எழுதி அனுப்பி வைத்துள்ளார்.

தமிழக மீனவர்கள் 23 பேர் மீன்பிடிக்கும்போது தவறுதலாக இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்துவிட்டனர். அவர்களை நேற்று முன்தினம் பிற்பகல் இலங்கைக் கடற்படை கைது செய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ள தகவல் எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

நான் மே மாதம் பதவியேற்ற பின்னர் 4 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கையில் காவலில் வைக்கப்பட்டனர். இதுகுறித்து ஜூன் 7ஆம் திகதி உங்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். இந்த விவகாரத்தை இலங்கை அரசிடம் கொண்டு சென்றிருப்பதாக ஜூன் 15 ஆம் திகதியிட்ட கடிதத்தில் நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். அவர்கள் ஜூன் 17ஆம் திகதி விடுவிக்கப்பட்டுவிட்டனர். இந்த விவகாரத்தில் நீங்கள் தலையிட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமேஸ்வரம் கடற்கரைக்கு வெகு அருகில் உள்ள சர்வதேச கடல் எல்லையை கடக்கும் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனால் தமிழகத்தில் மீனவர்களிடையே பதற்றம் ஏற்படுகிறது.

ஜூன் 14ஆம் திகதி நான் உங்களை டில்லியில் சந்தித்திருந்தேன். அப்போது இந்த விவகாரத்தை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனுடன் விவாதித்தேன். அதற்கு முன்பு ஜூன் 9ஆம் திகதி அவர் கொழும்பு செல்வதற்கு முன்பாகவும் இந்த விவகாரத்தை அவருடன் விவாதித்திருந்தேன்.



தற்போது இலங்கை கடல் எல்லைக்குள் தவறுதலாகச் சென்ற 23 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் 5 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. எனவே அவர்களை இலங்கை அரசு உடனடியாக விடுவிக்க நீங்கள் தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று தமிழக முதல்வர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தல் அதிகாரிகளுக்கு இலவச இரவு உணவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு இலவசமாக இரவு நேர உணவு வழங்கப்படவுள்ளது.

இது சம்பந்தமான அறிவித்தல் கிராம அலுவலர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கடமையாற்றும் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட ஆண் அலுவலர்கள், ஆண் லிகிதர்மார்களும் வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்கும் பெட்டிகளுடன் முதல்நாள் இரவு தங்க வேண்டிய நிர்ப்பந்தமுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் இவர்கள் வாக்களிப்பு நிலையத்தில் தங்காது, தமது வீடுகளுக்குச் சென்று விட்டு வாக்களிக்கும் நேரத்தில் வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இத்தகைய நடவடிக்கையை தேர்தல் அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பெரிய புராண சொற்பொழிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அருமிகு வைரவ சுவாமி கந்தசுவாமி கோயில் கர வருஷ திவ்விய மஹோற்சவ கால பெரிய புராண தொடர் சொற்பொழிவு இன்று முதல் எதிர்வரும் யூலை முதலாம் திகதி வரை தினந்தோறும் மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சொற்பொழிவினை ஆன்மீகச் சொற்பொழிவாளர் இலக்கிய தமிழருவி, செஞ்சொற் செம்மல் இரா.கேதீசன் வழங்கவுள்ளார். அனைத்து முருகப் பெருமான் அடியார்களையும் மஹோற்சவ காலக் கிரியைகளில் கலந்து கொள்வதுடன் மாலைப் பொழுதில் இடம்பெறும் பெரிய புராண தொடர் சொற்பொழிவுகளைக் கேட்டு திருவருள் பெற்றுய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# புதூர் நாகதம்பிரான் வருடாந்த பொங்கல் விழா

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கள் கிழமை மிகவும் விமரிசையாக நடைபெறவுள்ளது

இதற்குரிய ஏற்பாடுகளை ஆலய நிருவாகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

வன்னி பிரதேசத்தில் புதுமை மிக்க ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும்.

பொங்கல் உற்சவத்திற்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

பொங்கலுக்கு முதல் நாள் 26ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெறும் இம்முறை ஆலயத்தில் தீ மிதிப்பும் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகின்றது

தமது நேர்த்தி கடனை தீர்க்க வரும் பக்தர்கள் காவடி எடுத்தல் போன்ற பல்வேறு சமயச் சடங்குகளில் ஈடுபட சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்

ஆலயச் சூழலில் பாதுகாப்பு, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளும் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகின்றது

இவ்வாலயத்தில் வன்னியின் பாரம்பரிய முறைப்படி நள்ளிரவு மடப்பண்டம் எடுத்து வந்து பொங்கல் இடம்பெறும்

# சுயதொழில் ஊக்குவிப்பு

சண்டிலிப்பாய் பிரதேச செயலக எல்லைக்குள் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு எவ்.ஏ.ஓ நிறுவனத்தினால் வளர்ப்புக் கோழிகள் வழங்கப்பட்டது.

சண்லிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 25 பயனாளிக் குடும்பங்களுக்கு தலா 20 வளர்ப்புக் கோழிகளும், அவற்றுக்கான உணவு மற்றும் கோழிக்கூட்டுக்குரிய பொருட்களும் வழங்கப்பட்டது.

மேற்படி உதவி வழங்கும் திட்டத்தில் வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டியங்கும் குடும்பங்கள் குறைந்த வருமானம் ஈட்டும் குடும் பங்களுக்கே இந்த சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்பட்டன. (அ)

# இரு நேர வகுப்புக்கள் சில பாடசாலைகளில் அமுல்

(கொழும்பு)

நாட்டில் தெரிவு செய்யப்பட்ட சில அரச பாடசாலைகளில் இரண்டு நேர வகுப்புக்களை நடாத்த கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

சில புாடசாலைகளில் மாணவர்கள் விஞ்ஞானம், வர்த்தகம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் என்பனவற்றை உரிய முறையில் கற்றுக்கொள்ள வசதியாகவே இந்த நேர அட்டவணையை மாலை நேர வகுப்புகளில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் இந்தச் செயற்பாடுகளுக்கு பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும் எனவும் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

பெற்றோர்களும், ஆசிரியர்களும் இத்திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் கல்வியமைச்சு தெரிவிக்கின்றது. பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளை பூரணப்படுத்த முடியாததால், அவற்றை இரு நேரப் பாடசாலைகளாக மாற்ற இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சர்வதேசத்துடன்...

நன்மைகளை தெளிவுபடுத்தி உலக நாடுகளை அரசாங்கத்தின் பக்கம் திருப்பும் முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ்,

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் பதில் எதனையும் அளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட அபிவிருத்தி தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இதனை சர்வதேச சமூகம் பார்வையிடக் கூடிய வகையில் பகிரங்கப்படுத்த உத்தேசித்துள்ளதாகவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் விளக்கமளித்தார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கைக்கு எதிராக செயற்படவில்லை எனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், படையினருக்கும் அரசாங்கத்திற்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் குறிப்பிட்டார்.

சனல் - 4 ஊடக ஆவணப் படம் மற்றும் தருஷ்மன் அறிக்கை போன்றவற்றை ஐக்கிய நாடுகள் அமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை

சனல்4 ஊடகத்தினால் வெளியிடப்பட்ட ஆவணப்படம் அரசியல் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனல் - 4 ஊடக ஆவணப் படம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவும் விசாரணைகளை நடாத்தும் எனவும், குறித்த ஆவணப்படம் தொடர்பில் பல்வேறு சந்தேககங்கள் நிலவி வருவதாகவும் அவர் கூறினார்.

ஆவணப்படத்தின் துல்லியத்தன்மையை கருத்திற் கொண்டால் அது செல்லிடப்பேசி மூலம் எடுக்கப்பட்டதல்ல என்பதனை விளங்கிக் கொள்ள முடியும்.

இந்த வீடியோ காட்சியின் ஒளி ஒலி வடிவங்களின் தன்மையிலும் சந்தேகம் எழுந்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் போது எவ்வித பின்னணி ஒலியும் கேட்கவில்லை உதாரணமாக பறவைகளின் ஒலி போன்றவை கிடையாது.

எனவே இந்த ஆவணப்படம் போலியாக தயாரிக்கப்பட்டது என்றே நிபுணர்கள் கருதுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

## வன்செயல்...

கூறினார். இதன்படி ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் மற்றும் பிரதேசங்களிலிலும் இடம்பெறும் அரசியல் வன்முறை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு பதிலாக அப்பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் திணைக்களத்தில் இயங்கும் விசேட பொலிஸ் முறைப்பாட்டு பிரிவிற்கு அறிவிக்க முடியும்.

இதன்மூலம் தேர்தல்கள் திணைக்களத்தினால் உடனடியாக வன்முறைகள் ஏற்படுவதை தடுக்க முடியும். அத்துடன் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

இந்த பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவானது தேர்தல் நிறைவு பெறும் வரை செயற்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## புலிகளின் படை...

உரிமை கொண்டாட முடியாது என்று பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.


புலிகள் அமைப்பு தொடர்ந்தும் போராட்டத்தில் நாட்டம் கொண்டிருந்த காரணத்தால் அதிலிருந்து தானாகவே வெளியேறி வந்தேனே தவிர, ஐ.தே.கட்சியோ வேறு எந்தத் தரப்பினரோ அதற்காக உரிமை கொண்டாட முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புலிகளின் தலை மைக்கும் தனக்கும் இடையில் பிளவை ஏற்படுத்தியது அன்றைய காலகட்டத்தில் அமைப்பின் சட்ட ஆலோசகராக செயற்பட்ட விஸ்வநாதன் உருத்திரகுமாரன் தான் என்றும் அவர் குற்றம்- சாட்டுகின்றார்.

ஆயினும், புலிகள் அமைப்பு பேச்சுவார்த்தை மூலமாக அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதில் நாட்டம் கொண்டிருக்காத காரணமே தன்னை அந்த அமைப்பிலிருந்து பிரிந்து செல்ல நிர்ப்பந்தித்த தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# தகவல் சுதந்திர சட்ட மூலம் ஐ.தே.கட்சியின் முயற்சி தோல்வி



(கொழும்பு)

அரசாங்கத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையளிக்கும் விதமான தகவல் உரிமை சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் ஐதேகவின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தனிநபர் பிரேரணையாக இதை சமர்ப்பிக்கவிருந்தார். அரசாங்கத்தரப்பிலிருந்து இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கம் தகவல் அறிவதற்கான சட்டமொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதால் இந்த தனிநபர் பிரேரணையை ஆதரிக்க முடியாது என அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையையடுத்து தேவையானால் இது தொடர்பாக வாக்கெடுப்பு நடத்தலாம் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அறிவித்தார்.

அவ்வாக்கெடுப்பில் பிரேரணைக்கு எதிராக 97 வாக்குகளும் ஆதரவாக 34 வாக்குகளும் கிடைத்தன. இதனால் 63 மேலதிக வாக்குகளால் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. ஐ.தே.க., ஜே.வி.பி., த.தே.கூ. ஆகியன பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தன.

# வவுனியா நகரசபைக்கு புதிய தலைவர் நியமிக்க ஏற்பாடு

(கொழும்பு)

வெற்றிடமாகவுள்ள வவுனியா நகர சபையின் தலைவர் பதவிக்கு சபை உறுப்பினரான ஐயாததுரை கனகையாவை நியமிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் புனரமைக்கப்பட்ட வவுனியா வரியிறுப்பாளர் சங்கத்தினர் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக பெரும்பான்மை நகர சபையின் 9 உறுப்பினர்கள் கனகையாவை தலைவராக நியமிப்பதில் தங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என இணக்கக் கடிதத்தில் ஒப்பமிட்டிருந்தனர்.

கடந்த மூன்று மாதத்திற்கு மேலாக சபை நிர்வாகம் நடைபெறவில்லை மக்களுடைய தேவைகள் நிறைவேற்றப்படவில்லை, நகர எல்லைக்குள் அபிவிருத்தி செயற்பாடுகள் முடங்கியுள்ளது இந்த நிலையில் உடனடியாக சபை கூட்டம் இடம்பெற வேண்டும் என பல தரப்பினரும் கோரிக்கைவிடுத்த நிலையில் வரியிறுப்பாளர் சங்கம் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் இணக்கத்தை ஏற்படுத்த பேச்சுக்களை நடத்தியது.

# பூநகரியில் விவசாய அபிவிருத்தி; சம்மேளனங்களுக்கு உழவு இயந்திரங்கள்

(பூநகரி)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பூநகரி கமநலசேவை அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட 19 உழவு இயந்திரங்களும் கமக்கார அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பூநகரி கமநல சேவைகள் உத்தியோகத்தர் ந.சுந்தரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட 19 கமக்கார அமைப்புக்களுக்கு வழங்குவதற்காக 19 உழவு இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. இவை அனைத்தும் ஒவ்வொரு கமக்கார அமைப்புக்களிடமும் இவ் உழவு இயந்திரங்கள் கையளிக்கப்பட்டிருக்கின்றன.

இக்கமக்கார அமைப்புக்களிடம் இருந்து இந்த உழவு இயந்திரங்களைக் குறைந்த செலவில் பெற்று விவசாயிகள் பயன்பெற முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (112)

# யுத்தப் பாதிப்பிற்கு வாழ்வாதார உதவி

(கொழும்பு)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதார உதவிக்கென 37 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவை வழங்கவுள்ளது.

பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டு போதிய வருமானம் இன்றித் தவிக்கும் குடும்பங்களுக்கு இந்த நிதி வழங்கப்படவுள்ளன.

மாற்றுவலுவுள்ள பெண்களைக் குடும்பத்தலைவர்களாகக் கொண்ட வாழ்வாதாரம் அற்ற குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதனைப் பயன்படுத்தி சிறுதொழில் சிறு வியாபாரம் மூலம் வாழ்வை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மின் தடை

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு 23.06.2011 வியாழக்கிழமை, 24.06.2011 வெள்ளிக்கிழமை மற்றும் 27.06.2011 திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களிலும்.

25.06.2011 சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப் பகுதி ஆகிய இடங்களிலும்.

26.06.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு மற்றும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிப் பிரதேசம், கலட்டிப் பிரதேசம், பிறவுண் வீதியில் ஆடியபாதம் வீதியிலிருந்து கலட்டிச் சந்தி வரை. கம்பஸ் லேன், தலங்காவில் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## வீதி விளக்குகள் எப்போது ஒளிரும்?

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டைப் பகுதி வீதிகளில் போடப்பட்டுள்ள பல மின் விளக்குகள் பலமாத காலமாக ஒளிராமல் இருப்பதினை இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப் பகுதியில் உள்ள ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றுவருகின்றது. மேலும் இவ் ஆலயத்தில் தொடர்ந்து அலங்கார உற்சவம் நடைபெற உள்ளது.

இந் நேரத்திலாவது, ஈச்சமோட்டை விதானை வீதியில் உள்ள மின்குமிழ்களினையாவது ஒளிரச் செய்ய நடவடிக்கை எடுப்பார்களா? என இப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

மேலும் அயல் கிராமத்தில் நடைபெற்ற ஆலய உற்சவத்தினை முன்னிட்டு ஈச்சமோட்டை பிரதான வீதியில் ஒருசில மின்குமிழ்கள் திருத்தப்பட்ட பொழுதும் மேலும் சில மின்குமிழ்களும் ஒளிராமல் உள்ளமையும் இப்பகுதி மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (42)

# கர்ப்பிணித் தாய்மாருக்கு போஷாக்கு விழிப்புணர்வு

(நல்லூர்)

கர்ப்பிணித் தாய்மார்க்களுக்கான போஷாக்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறுவதாக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி எஸசிவசங்கர் அறிவித்துள்ளார்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட கர்ப்பணித் தாய்மார்க்கள் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகள் மற்றும் துறைசார்ந்தவர்கள் கலந்துகொண்டு கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்க்களுக்கான போஷாக்கின் முக்கியத்துவம் குறித்து விளக்க மளிக்கவுள்ளனர்

இதேவேளை, நாளை சிறுவர்களுக்கான போஷாக்கு தொடர்பான விழிப்புணர்வூட்டல் நிகழ்வு சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக நடைபெறவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (கா)

# வடக்கில் தொடர்கிறது ஜெய்ப்பூர் நிறுவன சேவைகள்




(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் நடமாடும் உபகரணத் தயாரிப்பான சற்கர நாற்காலி, முச்சக்கர வண்டி, முழங்கை ஊன்றுகோல், தோள்மூட்டு ஊன்றுகோல் உட்பட்ட ஏனைய நடமாடும் உபகரணத் தயாரிப்புக்களும் மாற்றுவலுவுள்ளோருக்கான சேவைகளும் வழமை போன்று தொடர்ந்து நடைபெறுகின்றது.

அத்துடன் எதிர்வரும் 16.07.2011 ஆம் திகதி யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 24 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாற்றுவலுவுள்ளோருக்கிடையிலான முச்சக்கர வண்டி ஓட்டம், துவிச்சக்கர வண்டி ஓட்ட விளையாட்டுப் போட்டிகளுடன் பல கலைநிகழ்வுகளும் நடைபெறருப்பதால் இந்நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்பும் மாற்றுத்திறன் உள்ள ஆர்வலர்கள் ஜெய்ப்பூர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். ஜெய்ப்பூர் நிறுவன முகாமைத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## கைத்தொலைபேசி தந்தது விபரீதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் கைத்தொலைபேசியில் உரையாடிக்கொண்டு போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்த நபர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றம் நேற்று 5000 ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது.

யாழ்.பொலிஸாரினால் குறித்த நபர் மீது யாழ்.நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கினை விசாரணை செய்த நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா 5000 ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார். (பா)


## மலர் வெயீடு

(யாழ். நிருபர்)

உசன் கஜகேணி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகத்தையொட்டி சிறப்புமலர் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் சி.தேவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் இ.குமரன் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். கும்பாபிஷேக மலரின் முதற்பிரதியை க.சிவபாதசுந்தரம் பெற்றுகக்கொண்டார். (10)







வடமாகாண கல்வித்திணைக்களம் "பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம்." எனும் தலைப்பில் மீலாத் விழாவினை யாழ் ஒஷ்மானியாக் கல்லூரியில் நேற்று நடாத்தியது பிரதம விருந்தினர்கள் இஸ்லாமிய பாரம்பரிய முறையில் வரவேற்கப்படுவதையும், கல்லூரியின் அதிபர் ஜனாப் எம்.எஸ்.ஏ.எம் முபாறக் வரவேற்புரை நிகழ்த்துவதையும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுவதையும் இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் ஜனாப் எம்.எஸ்.ஏ.எம்.ஜனாப், எம்.எஸ்.ஏ.எம். முபாறக் தலைமையில் இடம்பெற்ற விழாவில். பிரதம விருந்தினர்களாக யாழ் பதில் வலயக்கல்விப் பணிப்பாளர் வி.இரவீந்திரன் மற்றும் தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் வி.இராதாகிருஷ்னன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.